பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 01 வெள்ளிக்கிழமை 16.06.2023 கதிர் 217

## மருதங்கேணி விவகாரத்தில் மீண்டும் வாக்குமூலம்

# குற்றவாளியாக்கும் நோக்குடனே கேள்விகள் தொடுக்கப்பட்டதாக கஜேந்திரகுமார் விசனம்

### பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாக இயங்கவேண்டும் எனவும் வலியுறுத்து

பொலிஸ்திணைக்களம் அமைச்சு மட்டத்திலிருந்து வரும் உத்தரவுகளுக்கு அடிபணியாது சுயாதீனமாக இயங்கவேண்டும் என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தன்னைக் குற்றவாளியாக்கும் நோக்குடனேயே வாக்குமூலம் அளிக்கின்றபோது கேள்விகள் தொடுக்கப்பட்டதாக சுட்டிக் காட்டினார்.

ஜூன் 3ஆம் திகதி மருதங்கேணியில் பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறையினருக்கும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடந்த முரண்பாட்டு தொடர்பில் நேற்று இரண்டாவது தடவையாக சுமார் நான்குமணிநேரம்வாக்குமூலம்அளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் கடந்தவாரம் நாடாளுமன்ற ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கும் ஆளும் தரப்புக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் புதன்கிழமை இடம்பெற்ற பேச்சில் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்சவும் கலந்துகொண்டிருந்தார். மகிந்தவுக்கும் அவருக்கும் தனியான அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் மகிந்த கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் இந்த ஆட்சிக்கு மொட்டுக் கட்சி தொடர்ந்து ஆதரவு தரும் என்கிற உத்தரவாதம் பஸில் ராஜபக்சவால் தரப்பட்டதாகஎல்லாஊடகங்களும்செய்திகள் வெளியிட்டன. இந்தச் சந்திப்பு நடந்து முடிந்த மறுநாளே, அதாவது நேற்று உள்ளூராட்சி சபைகளில் மொட்டுக் கட்சியின் சார்பில் தலைமைப் பதவிகளை வகித்தவர்கள் - அதாவது மாநகர முதல்வர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் - மற்றும் கட்சியின் மாவட்டஅமைப்பாளர்களைபஸில்ராஜபக்ச சந்தித்துப் பேசினார்.

இந்தச்சந்திப்பில்பல்வேறுமுக்கிய விடயங்கள் பேசப்பட்டதுடன் கட்சி ☞ 2

## இலங்கை பதிலளிக்கும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்கப்படவுள்ள வாய்மூல அறிக்கைக்கு அமைய, இலங்கைசார்பில்பதிலளிக்கப்படுமென அயலுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தொடரில்; ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி அருணதிலக்க தலைமையிலான குழுவினரே கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி. ஜூலை 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது

இலங்கை தொடர்பிலான வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி ☞ 2

## கல்வி-பொருளாதாரம்-காலநிலை மாற்றம் மூன்றும் ஒன்றிணைந்த வளர்ச்சியே இலக்கு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கல்வி, பொருளாதாரக் கட்டமைப்பு, காலநிலை மாற்றம் ஆகிய மூன்று துறைகளும் ஒன்றிணைந்த பொருளாதார வளர்ச்சியே எமது இலக்கு என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கான அமைச்சர்கள்குழுவிற்குஒத்துழைப்பு வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் முதலாவது கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியைப் பற்றிப் பேசுவதற்கு முன், நமது நீண்டகாலப் பொருளாதாரத் தத்துவத்தைப் பற்றிப் பேசவேண்டும். கல்வி அதற்குச் சமாந்தரமாகச் செல்லவேண்டுமே ☞ 2

## கருத்துரிமையைப் பறிக்கும் வகையில் ஒருபோதுமே செயற்படப்போதில்லை

### ஜனாதிபதி இப்படிக் கருத்து

வலயத்தின் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாதவாறு குற்றவியல் அவதூறு சட்டத்தினை நீக்கிய நான் ஒருபோதும் கருத்துரிமையை பறிக்கும் வகையில் செயற்படப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல்ஆணைக்குழு சட்டமூலமானது இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக எவருக்கேனும் நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில், அவர்களுக்குநிவாரணம் பெற்றுக்கொடுக்க வழி ஏற்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இணைய முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் வேலைத் திட்டத்தை ஹோமாகம பிரதேச செயலக அலுவலக வளாகத்தில் ☞ 2

## குருந்தூர் மலை விவகாரம் பௌத்த சாசன அமைச்சர் விதுரவை பதவி விலக்கவேண்டும் ஜனாதிபதி

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

குருந்தூர்மலை விவகாரத்தில் இராணுவத்தினரோடு இணைந்து பின்னணியில் இருந்து முழுமையாகச் செயற்பட்டவர் பௌத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க. தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரைப் பார்த்து, முடியாவிட்டால் பதவியிலிருந்து விலகுங்கள் என்று கூறிய ஜனாதிபதி உண்மையில் அமைச்சர் விதுரவைத்தான் பதவி நீக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பதவி விலகிய ☞ 6

## குருந்தூர், திரியாய் விகாரைக் காணிகள் தொடர்பில் ஆராயக் குழுகள் நியமனம்

வவுனியா மாவட்டம், குருந்தூர் மலை மற்றும் திருகோணமலை மாவட்டம் திரியாய் மலை ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் விகாரைகளுக்காக 5000 ஏக்கர் நிலங்கள் கேட்கப்படுவதற்கு நியாயமான காரணங்கள் உண்டா என்பதை அராய்ந்தறிய குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ள.

ஹோமாகம பிரதேச செயலக அலுவலக வளாகத்தில் நேற்றையதினம் இணைய முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும்வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுகுருந்திவிகாரை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நான் அங்கு தமிழ் மக்களை ☞ 2

## அனைத்துக் காய்ச்சல் நோயாளர்களையுமே நுளம்புகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும்

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நுளம்புகள் மூலம் டெங்கு பரவுவதால், அனைத்து காய்ச்சல் நோயாளிகளையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும் என்ற விடயத்தை மக்களிடம் விரைவில் கொண்டு செல்ல வேண்டும்எனடெங்குஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவி இராஜாங்கஅமைச்சர்விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

டெங்குநோய்பரவலைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட மேல்மாகாண உபகுழு நேற்று மேல்மாகாண தலைமைச் செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் கூடியபோதே இராஜாங்க அமைச்சர்சீதாஅரம்பேபொல இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் டெங்கு ஒழிப்புக்கான அமைச்சர்கள் குழு மற்றும் நிபுணர் குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டதுடன், அந்த நிபுணர் குழு மாகாண மட்டத்தில் 9 உப குழுக்களையும் நியமித்துள்ளது.

நிபுணர் குழுவின் தலைவி இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தலைமையில் கூடிய மேல்மாகாண உப குழு, எதிர்வரும் சில தினங்களுக்குள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியது.

இதன்போது, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களைப்போன்றுடெங்கு நோய்ப் பாதிப்பு ☞ 2

## உணவுப் பாதுகாப்பு மேம்பட்டு வருகிறது

2023 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும், உணவுப்பாதுகாப்புமேம்பட்டுவருவதாகஐக்கியநாடுகளின்உணவு மற்றும் விவசாய அமைப்பு வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரியவந்துள்ளது.

அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

3.9 மில்லியன் மக்கள் அல்லது மக்கள்தொகையில் 17 சதவீதம் பேர் மிதமான கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுஜூன்மற்றும்ஜூலை மாதங்களுடன் ஒப்பிடும் போது சுமார் 40சதவீதம் குறைந்துள்ளது.

ஏறக்குறைய 10,000 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர், கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை ☞ 6

## மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023 முதல் காலாண்டில் வீழ்ச்சி

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளதாக மக்கள் தொகைக்கணக்கெடுப்புமற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய கணக்கு மதிப்பீடுகளின் கீழ் 2023 முதல் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பிற மைக்ரோ பொருளாதார குறிகாட்டிகளின் மதிப்பீடுகள் நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக வெளியிடப் பட்டுள்ளது.

அதன்பிரகாரம், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத் தியின் வளர்ச்சி 11.5 சதவீதம் வீழ்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், விவசாயபொருளாதார நடவடிக்கைகள் ☞ 2

## ரணில் - ராஜபக்ச அரசால் இந்த நாட்டை மீட்க முடியாது

### தேர்தல் வேண்டும் என கிரியெல்ல வலியுறுத்து

வீழ்ச்சியடைந்த எமது நாட்டை ரணில் - ராஜபக்ச அரசால்மீட்கமுடியாதுஎன்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எனவே, உடனடியாகத் தேசிய மட்டத்திலான தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும்என்றும்அவர்வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.




சர்வதேசஉதவிகிடைக்கும் என ஆட்சியாளர்கள் கூறினாலும், குறிப்பிட்டுக் கூறுமளவுக்குஇன்னும்உதவி கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், நாட்டை மீட்பதற்காக எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## போதகர் ஜெரோம் மீது மற்றொரு குற்றச்சாட்டும்

### நீதிமன்றத்தில் நேற்று அறிவிப்பு

போதகர் ஜெரோம் பெர்ணான்டோவுக்கு எதிராக மத நிந்தனை விடயத்துக்கு மேலதிகமாக கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் சிறப்பு விசாரணைகள் இடம்பெறுவதாக சட்ட மா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

தான் கைது செய்யப்படுவதை தடுத்து உத்தரவொன்றினை பிறப்பிக்குமாறு கோரி போதகர் ஜெரோம் ☞ 6

## போதைப் பொருள் விற்ற பணத்திலேயே விடுதலைப் போராட்டம் நடத்தப்பட்டது

### போதை ஒழிப்புக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் வாக்குமூலம்

ந.லோகதயாளன்.

போதைப்பொருள் விற்ற பணத்திலேயே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் நடத்தப்பட்டதாக மீன் பிடித்துறைஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார்.

''மீன் வித்த காசு மனக் காது என்பதுபோல் போதைப்பொருள் வித்தகாசு வேண்டியேபோராட்டம் ☞ 2

## தங்கம் கடத்திய ரஹீம் எம்பி குறித்து முழு அறிக்கை கேட்டார் சபாநாயகர்

### அடுத்த கட்ட நடவடிக்கைக்காக

சட்டவிரோதமாகத் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை நாட்டிற்குக் கொண்டுவந்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் விசேட அறிக்கையைசமர்ப்பிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கோரியுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளதாவது,

சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கையை உடனடியாக வழங்குமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தேர்தலுக்குத்தயாராவதைப் பற்றியும் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டிருக்கின்றது. தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு பஸில் அவர்கள் எல்லோருக்கும்அறிவுறுத்தியுள்ளார்.

தமிழில்ஒருபழமொழி இருக்கின்றது, நம்ப நட நம்பி நடவாதே என்று. அதுபோன்றுதான்பஸிலின் நடவடிக்கைகளும் இருக்கின்றன. முதல் நாள் கூட்டத்தில் இந்த ஆட்சிக்கு - ரணில் தலைமையிலான ஆட்சிக்கு - முழு ஆதரவு வழங்கப்படும் என்று தெரிவித்துவிட்டுவந்த மறுநாளே கட்சியின்மாவட்டஅமைப்பாளர்களைத் தேர்தலுக்குத் தயாராகும்படியும் சொல்லியிருக்கிறார்.

ரணிலின்,ஆளும்தரப்பு வர்த்தகத்தில்ஈடுபடக்கூடாது என்கிற கொள்கைக்கும் மொட்டுக்கட்சியின்இடதுசாரி முகத்துக்கும் இடையிலான உரசல்கள் ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதில் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு இலாபகரமாக இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தக்கூடாது என்று மொட்டுக் கட்சிக்குள் நாமல் ராஜபக்சதலைமையில்ஒருகுழுவினர் பகிரங்கமாகவேகருத்துத்தெரிவித்து வருகின்றனர். அது தமது கட்சியின் கொள்கைக்கு முரணானதுஎன்றுஅவர்கள் கூறுகின்றனர்.

ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார்மயப்படுத்துவதை ராஜபக்சக்கள் எதிர்ப்பதற்கு மற்றொரு காரணமும் இருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில்பேச்சிருக்கின்றது. ரெலிக்கொம்நிறுவனத்தின் 49 சதவீதம் பங்குகள் ஏற்கனவே தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுவிட்டது. எஞ்சிய 51 சதவீதப்பங்குகளைத்தான் விற்கவேண்டியிருக்கிறது. அந்தப் பங்குகளை புலம் பெயர் தமிழரான அல்லி ராஜாசுபாஸ்கரன்தலைமையிலான லைகா நிறுவனமே வாங்கப் போகின்றது, அதனாலேயே ராஜபக்சக்கள் எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதே அந்தப் பேச்சு. அதனாலேயே ரெலிக்கொம்மை விற்பது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிற கதைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

போரில் வென்று தாங்கள் மீட்ட நாட்டை தமிழர்களிடம் விற்பதா என்பதே ராஜபக்சக்களின் பிரச்சினையாக இருக்கக் கூடும். இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி மொட்டுக் கட்சி குடைச்சல் கொடுக்கத் தொடங்கினால் எல்லாத் தேர்தல்களுக்கும் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை ரணில் விக்கிரமசிங்க நடத்தக்கூடும் என்கிற எதிர்பார்ப்பும் பேச்சும்கூட கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் உண்டு. அப்படி ஒரு நிலைமை திடீரென வந்தால் எதற்கும் தயாராக இருக்கும் வகையில்தான் பஸில் தனது கட்சிக்காரர்களை தேர்தலுக்குத் தயாராகும்படி அறிவுறுத்தியிருக்கிறார். ரணிலை நம்பி நடக்கக் கூடாது என்பது ராஜபக்சக்களுக்கு நன்பு புரிந்திருக்கிறது.

**இடிமின்னல்**

## மருதங்கேணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த்திற்கு செல்வதற்கு தயாராகிய வேளையில் கைது செய்யப்பட்டு மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டிருந்தேன். அதன்போது என்னிடத்தில் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வியாழக்கிழமையும்வாக்குமூலம் வழங்குவதற்கு இணங்கியிருந்தேன்.

இந்நிலையில் வாக்குமூலம் என்னிடத்தில் பெறப்பட்டது. ஆனால் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்துமே என்னை குற்றவாளியாக காண்பிக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடனேயே இருந்தது.

இந்த விடயத்தில் பொலிஸ்தரப்பு சுயாதீனமாக செயற்பட வேண்டும். அவர்கள் அமைச்சு மட்டங்களில் இருந்து வருகின்ற உத்தரவுகளுக்கு அடிபணியக்கூடாது.

தொடக்கத்தில் இந்த விடயத்தினை சமரசமாக தீர்ப்பதற்கு பொலிஸ் தரப்பு முனைந்தது. அதன்போதே பொலிஸ் தரப்பில் காணப்படுகின்றன தவறுகள் வெளிப்பட்டு விட்டன.

இந்தநிலையில்தற்போது என்னிடத்திலும் எமது ஆதரவாளர்களிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறானினும், பொலிஸாரின் இந்தப் பக்கம் சார்ந்த நடடிவக்கைகளின் பின்னால்யார்உத்தரவிடுவது, யார்இருக்கின்றார்கள்என்பது நன்றாகவே தெரிகின்றது என்றார்.

## கல்வி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர இரண்டும் வெவ்வேறு வழிகளில் செல்லமுடியாது.

குறுகிய காலத்தில் கடன் சுமையில் இருந்து விடுபட முயற்சி செய்துவருகிறோம். அதன் பிறகு, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமானால் மூன்று ஆண்டுகளில் 8% முதல்9%வரைபொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும். குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாவது அந்த நிலை நீடிக்கவேண்டும். இதைச்செய்தால்தான் நாம் முன்னேற முடியும்.

பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பாதிக்கும் பல காரணிகள் உள்ளன. உற்பத்திகளை மேம்படுத்த முடியுமாக இருந்தால் அது ஒரு பெரிய முன்னேற்றமாகும். நாம் குறைந்தபட்சம் மலேசியாவையும் சீனாவையும் பார்க்கவேண்டும். அதன் பிறகு சிங்கப்பூர் போன்ற பெரும் வளர்ச்சிக்குச் செல்லலாம். ஒரேயடியாக இதனைச் செய்ய முடியாது.

இதற்குமுக்கியம்தேவையானது மனித வளமாகும். இன்று தென் கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் மனித வளத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைந்துள்ளன. இந்தியாவும் அந்த இலக்கை எட்டப் பார்க்கிறது. அந்த நிலைக்கு நாம் எப்படிச் செல்வது என்பதை தீர்மானிக்க வேண்டும்.

அடுத்த 10 ஆண்டுகளில் ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் தேவைக்கேற்ப பயிற்சிபெற்றபணியாளர்கள் பற்றாக்குறைஏற்படும். அதைச் சமாளிக்கும் வகையில், தானியங்கி முறையில் கவனம் செலுத்துவதுடன், இலங்கையை முன்னோக்கி நகர்த்தும் பயணத்தில், மேம்பட்ட தானியங்கி உற்பத்தி செயல்முறையிலும் கவனம் செலுத்தவேண்டும்.

முதலில்கல்வி, பொருளாதாரக் கட்டமைப்பு, கால நிலை மாற்றம் ஆகிய மூன்று துறைகளும் ஒன்றிணையவேண்டும். போட்டி இருந்தால்தான் முன்னேற முடியும். எங்கள் இலக்கு மிகவும் போட்டி நிறைந்தபொருளாதாரமாகும் - என்றார்.

## இலங்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு இதன்போது இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியமர்த்தப்போகின்றேன் என்று கூறுகிறார்கள்.

இவைஅனைத்தும்அரச காணிகள் என்பதை எல்லாவல மேதானந்த தேரருக்கு அறிவித்துள்ளோம். அந்த இடங்களில்தமிழர்களையோ சிங்களவர்களையோ அல்லது முஸ்லிம்களையோ குடியமர்த்த போவதில்லை என்பதையும் அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இன்னொரு பக்கம் திரியாயவை உடைத்து கட்டடம் கட்டப் போவதாகக் கூச்சல் இடுகின்றார்கள். அப்படி எதுவும் இல்லை. இதைப் பற்றி கொஞ்சம் ஆராய்ந்தால், 2018 ஆம் ஆண்டேநாடாளுமன்றக்குழு ஒன்றின் மூலம் இது குறித்து தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க குழுவொன்றை நியமிக்குமாறு நான் பணிப்புரை விடுத்துள்ளேன் - என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு குருந்தூர் விகாரை மற்றும் திருகோணமலை திரிய விகாரை ஆகியவற்றுக்கு 5 ஆயிரம் ஏக்கர் காணி கோரப்பட்டுள்ள நிலையில் அந்தக் கோரிக்கை தொடர்பில் அறிவியல்பூர்வமான தரவுகளடங்கிய விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வமாக இல்லாவிடினும் ஆட்சித் தரப்புக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் மூலம் இந்தத் தகவல் ஊடகங்களுக்குக் கசிய விடப்பட்டுள்ளது.

தொல்பொருளியலைப் பாதுகாப்பதற்காக குருந்தூர் மலைப் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் காணியும் திருகோணமலை திரிய விகாரைக்காக 2 ஆயிரம் ஏக்கர் காணியும் கோரப்பட்டுள்ளது. அத்துடன், இந்த காணிக் கோரிக்கையை நிறைவேற்றுவதாகஇருந்தால் வனவளத் திணைக்களம், காணி திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமானகாணிகளையும்வழங்க வேண்டிய நிலைமைகள் ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆகவே குறித்த கோரிக்கைமற்றும்அங்குள்ள காணிகளின் விபரங்கள் உள்ளிட்டஅனைத்துவிடயங்களையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்குசம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஜனாதிபதிஉத்தரவிட்டுள்ளார் என்று அந்தத் தகவல் கசிவு தெரிவிக்கின்றது.

முன்னதாக, கடந்த எட்டாம் திகதி இலங்கை தமிழரசுக்கட்சியுடன் நடைபெற்ற கூட்டத்தின்போது, குறித்த இருபகுதிகளிலும் உள்ள காணிகளை தொல்பொருளியல் திணைக்களம் அபகரிப்பதாக, நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், சுமந்திரன் உள்ளிட்டவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அத்துடன், அமைச்சரவைதீர்மானத்திற்குஅமைவாகவும், விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கொள்கைஇணக்கப்பாட்டிற்கு அமையவும்அக்காணிகளை விடுவிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளபோதும் தொல்பொருளியல் திணைக்களம் அதனைத்தடுத்துநிறுத்தியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருளியல்திணைக்களப் பணிப்பாளரை அமைச்சரவை தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துமாறு அழுத்தமாக கூறியிருந்தார். தொடர்ந்துதொல்பொருளியில் திணைக்கள பணிப்பாளர் தனது பதவியில் இருந்து விலகிச் சென்றிருந்தார்.

## மொத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

0.8 சதவீதம் சிறிதளவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

அதேநேரத்தில்தொழில் துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவை பொருளாதாரநடவடிக்கைகள் முறையே 23.4 சதவீதம் மற்றும் 5.0 சதவீதம் பின்னடைவை பதிவு செய்யப்பட்டுள்ளது.

2023 முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகளின் பங்களிப்பு முறையே 8.0 சதவீதம், 28.7 சதவீதம் மற்றும் 58.2 சதவீதம்ஆகபதிவாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## போதைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தினோம்" எனபோதைப் பொருள்ஒழிப்புத்தொடர்பில் நடத்தப்பட்ட கூட்டத்தில், போதை வியாபாரத்தை நியாயப்படுத்தும் விதத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச்செயலகத்தில் மாவட்டத்தின் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில்நேற்று அமைச்சர் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிக் கொண்டிருந்த அமைச்சர் திடீரென இப்படித் தெரிவித்துவிட்டார். எனினும் உடனேயே சுதாகரித்துக் கொண்டு, போதைப்பொருள் விற்றபணத்திலேயேபோராட்டங்கள்நடாத்தப்பட்டனஎன்று நான் மாறி கூறிவிட்டேன். நான்அங்கம்வகித்தஈரோஸ், ஈபிஆர்எல்எவ் போன்ற இயக்கங்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனைய இக்கங்கள் அவ்வாறு பணம் பெற்றுக்கொண்டன. அந்த இயக்கங்களிடம் இருந்து நாமும்பணம்வாங்கினோம் - என்றார்.

இதேநேரம் வடக்கில் ஓர் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையம் தேவை அதனால் ஜனாதிபதியுடன் கதைத்து பூந்தோட்டத்தில்அதனை அமைக்க உத்தேசிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். .

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், மருத்துவர்கள், பொலிசார் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அனைத்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்படும் வரை காய்ச்சல் ஏற்பட்டுள்ள அனைத்துநோயாளிகளையும் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்கவேண்டும் என்றும், அது தொடர்பில் மக்களைத் தெளிவூட்ட ஊடகங்களின் ஆதரவு தேவை எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையானது நோய்க் காரணி மற்றும்வைரஸின்அளவைக் கட்டுப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் எனவும்இராஜாங்கஅமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவமனைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் டெங்குவைக் கட்டுப்படுத்த தனி வழிகாட்டுதல்களைத் தயாரிக்குமாறு, தேசிய டெங்குகட்டுப்பாட்டுப்பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு, மருத்துவமனைகளில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட இடத்தில் (Fever Corners) அவர்களை தனிமைப் படுத்தவும், டெங்குநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மூலம் வேறு ஒருவருக்கு நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் குறுஞ்செய்திகள் மூலம் தெரிவிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறுமேலும்அறிவுறுத்தப்பட்டது.

டெங்கு நுளம்புகள் அதிகம்பெருகும்பகுதிகளான பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவன வளாகங்கள், வியாபார பகுதிகள், கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பகுதிகள் ஆகியவற்றை சோதனையிடுவதற்காக வாரத்தின் ஐந்து நாட்களை ஒதுக்கிக் கொள்ளுமாறும், அப்பகுதிகளை சோதனையிடும் பணிகளுக்கு பொலிஸார் மற்றும் முப்படையினரின் உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறும்சீதாஅரம்பேபொல உரிய தரப்புக்களுக்கு அறிவுறுத்தினார்.

பாடசாலைமாணவர்கள் மத்தியில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த உகந்தஆடைகளைஅணிந்து வருவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டதோடு அதனை கட்டாயமற்றதாகவும் பெற்றோர்களுக்கு மேலதிக செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## கருத்துரிமையைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தொடக்கி வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இணைய முறைமை ஊடாக கடவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் பணிகள் தொடங்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்துடன் துரித கதியில் முன்னெடுப்பதோடு, அடுத்த சில வருடங்களுக்குள்நாட்டின்அனைத்து துறைகளையும் டிஜிட்டல் முறைமையின்கீழ்வழிநடத்திச் செல்வதே எமது நோக்கமாகும்.

முன்னேறிய நாடாக நாம் பயணிப்பதற்கு டிஜிட்டல்மயமாக்கல்மிகவும் அவசியமானது. அதன் முதல் அத்தியாயத்தை தற்போதுஆரம்பித்துள்ளோம். சில திணைக்களங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. சில இடங்களில் நடைமுறைப் படுத்தப் படுவதில்லை. சில திணைக்களங்கள் இந்த முறைமையுடன் முன்னோக்கிச் செல்வதை விரும்புகின்றன.

ஏதோவொரு காரணத்திற்காக சில திணைக்களங்களும்நிறுவனங்களும் இத்திட்டத்துடன் பயணிக்கமறுக்கின்றன. எவ்வாறாயினும் இவர்கள் அனைவரையும் ஒரே இடத்திற்கு கொண்டு வருவதே எமது நோக்கமாகும். இந்த திட்டத்தை முதலில் தொடங்கிய அமைச்சர்டிரான்அலஸுக்கும் அவரதுஅமைச்சுக்கும்நன்றி தெரிவிக்கிறேன்.

பிறப்பிடம்முதல்மயான பூமிவரையிலானஅனைத்து செயற்பாடுகளையும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளோம். குடிவரவு, குடியகல்வு, தேசிய அடையாள அட்டை விநியோகம் உள்ளிட்ட எமது வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கு அவசியமான அம்சங்கள் அடங்கிய விடயங்கள் அமைச்சர்டிரான் அலஸின் தலைமையில் அவரது அமைச்சின் கீழ் முன்னெடுத்துச்செல்லப்படும் என எதிர்பார்க்கிறேன்.

இந்தச் செயற்பாடு ஹோமாகம பிரதேச செயலகத்தில் இடம்பெறுவதால் அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களும்பங்கேற்றுள்ளார். அதனால் ஊடகவியலாளர்இங்குவந்து'ஊடக அமைச்சர் ஊடகங்களை அழிக்கப் போகிறார், தென்கொரியாவை போன்ற நிலைமையை உருவாக்க போகிறார்' என எதிர்ப்பு போராட்டம் செய்வார்கள் என நினைத்தேன்.

ஊடகங்கள்ஏன்இவ்வாறு செயற்படுகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. எமது தண்டனைச் சட்டக் கோவையில் குற்றவியல் அவதூறுச் சட்டம் காணப்பட்டது. நானே அதனை நீக்கினேன். ஆசியவலயத்தின் எந்தவொரு நாடும் அதனை நீக்கியிருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

இவ்வாறிருக்க பாதுகாக்கப்பட்ட கருத்துரிமையை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் எதற்காக முன்னெடுக்கப்படுகின்றன? எவருக்கும் அதனை நீக்குவதற்கான அவசியமில்லை. இங்குள்ளஅனைவரையும்விட ஊடகங்களுடன் நெருக்கமான தொடர்பு எனக்கு உள்ளது. அதனால் கருத்துரிமையை பறிக்கும் நோக்கம் எனக்கு இல்லை; எவருக்கும் இல்லை.

இங்குள்ள பிரச்சினை மாறுபட்டதாகும். ஊடகங்களால் அநீதி ஏற்படும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தினை சகல நாடுகளும் கொண்டுள்ளன. இங்கு அரச ஊழியர்கள் இருக்கின்றனர். இவர்களின் எத்தனை பேருக்கு இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக அவதூறு ஏற்படுத்தப்பட்டிருக்கும்?

சில நேரங்களில் இலத்திரனியல் ஊடகங்கள் ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கப்போகும்நிவாரணம் என்ன? பொது மக்களுக்கு மாத்திரமின்றி எனக்கும் அந்தப் பிரச்சினை உள்ளது.

குறிப்பாக இதைப் பற்றி என்னாலேயே ஆராய முடியவில்லை என்றால், ஒரு சாதாரண மனிதனுக்கு அந்த நிவாரணம் எப்படிக் கிடைக்கும்? அந்தநிவாரணம் வழங்க மட்டுமே நாங்கள் பணியாற்றி வருகிறோம். இந்த வரைவுகள் எதுவும் இன்னும்முடிக்கப்படவில்லை இறுதி செய்யப்படவில்லை. ஐக்கிய இராச்சியத்தின் இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டுதல்களைச் சேர்க்குமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

தம்மைப் பற்றி பொய் ஒன்று கூறப்பட்டால், அதன் மூலம் அவர்களின் நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கப்பட்டால், எத்தனை பேர் வழக்குத் தொடுக்கலாம்? எனவே இந்த ஒளி, ஒலிபரப்பு அதிகார சபையை நிறுவுவதன் மூலம், அவர்கள் அந்த நிறுவனத்திற்குச் சென்று முறைப்பாடு அளிக்கலாம்.

தொடர்ச்சி 6 ம் பக்கம்



காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் உள்ள வளங்களை பாதுகாக்கக்கோரி கவனவீர்ப்பு














மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களைப் பாதுகாக்கக் கோரி சூழல் பாதுகாப்பிற்கான கவனவீர்ப்பு போராட்டம் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார்கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்கு முன் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இந்த கவனவீர்ப்பு ஆரம்பமானது.

இதன் போது இளைஞர்,யுவதிகள், சூழல் பாதுகாப்பு குழுவினர், மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது கவனவீர்ப்பு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர். மேற்படி ஊர்வலம் மன்னார் மாவட்ட் செயலகம் வரை சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதப்பட்ட மகஜர் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளாரால் வாசிக்கப்பட்டது. பின்னர் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்றினைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி

ஏ.ஸ்ரான்லி டி மேலிடம் பிரேரணை கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

சர்வதேசம் சி.ஓ.பி. 27 மூலம் இயற்கையைப் பாதுகாப்பது மற்றும் காலநிலை மாற்றங்களை நிர்வகிப்பது தொடர்பாகத் தனது தீவிர அக்கறை காட்டும் இக்காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வதும் அவசர தேவையாகும்.

முல்லை, மருதம், நெய்தல் நிலங்களையும், அழகிய நீர்நிலைகள், ஆறுகள் மற்றும் குளங்கள், மணல் திட்டுக்கள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் இயற்கை வனப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்டம் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு மிகவும் வளமான இடமாகும்.

கறிராஸ்-வாழ்வுதயம் நிறுவனம் 'இயற்கை வளங்களை பாதுகாப்போம்' எனும் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒன்பது கிராமங்களில் செயல்படுத்தி வருகிறது. இயற்கை வளங்களை பாதுகாக்கும் முயற்சிகளில் சமூகத்தின் பங்கேற்பையும், ஈடுபாட்டையும், நிலைத்த தன்மையையும் உறுதி செய்யும்

நோக்குடன் ஒவ்வொரு இலக்கு கிராமங்களிலும் சிறுவர், இளையோர், வளர்ந்தோர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அரச அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடனும், வழிகாட்டல்களுடனும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராம மட்டத்திலான சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்கள் சுரண்டல் செயற்பாடுகளின் முக்கியமானவற்றை தங்களின் மேலான கவனத்துக்கு, தடுப்பு நடவடிக்கைகளுக்கும் கோடிட்டுக் காட்டுகின்றன:

1. காற்றாலை திட்டம் – முதலாம் கட்டம்

மன்னார் தீவில் ஏற்கனவே சுமார் 30 காற்றாலைகள் நிறுவப்பட்டு, மணல் அகழ்வோடு இணைக்கப்பட்டு வருகின்றன. இந்த சிறிய தீவில் ஆண்டுக்கு 380 - 400 AG என்ற இலக்குடன் அதிக காற்றாலைகளை நிறுவுவதற்கான திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்து-வதற்கான சில அடிப்படை வேலைகள் நடந்து வருகின்றன. இந்தத் திட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், வெளிநாட்டுப் பறவைகள் வருகை குறைவு, மீன் உற்பத்திக் குறைபாடு, மண் வளம் அகழ்வு செய்யப்படுவது பற்றியும் கருத்தில் கொண்டு பாதிப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2. சட்டவிரோத மணல் அகழ்வு

அருவி ஆறு ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் அளவுக்கு அதிகமாக ஆறு ஆழமாக்கப்பட்டுள்ளமையால் கடல் வெள்ளம் உயரும் போது ஆற்று நீருடன் உப்பு நீர் கலப்பதால் ஆற்றங்கரை கிராமங்களின் நிலத்தடி நீர் உவராக மாறியுள்ளது. ஆற்றங்கரைகளில் தோட்டம் செய்ய முடியாதபடி நீர் உருவாகியுள்ளது. குறிப்பாக மடுக்கரை மற்றும் தம்பனைக்குளம் கிராமங்களின் குடிநீர் கிணறுகள் உவராக மாறியுள்ளன. ஆற்று வித்தன்களில் உள்ள பெரிய மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டு விலங்குகள் பறவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

3. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் கடல்வளம் பாரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது. ஆனால், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக எமது கடல் வளமும், கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க சுற்றுச்சூழலில் உள்ள பவளப்பாறைகளும், ஏனைய இடங்களும் அடியோடு அழிக்கப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் எமது மக்கள் மீன் தொழிலை இழப்பதற்கான குறிகாட்டிகளாகவே இவை துலங்குகின்றன.

4. காடழிப்பு

மன்னார் மாவட்டம் உள்நாட்டு யுத்தத்துக்கு முன்பு பரந்த காடுகளைக் கொண்டிருந்தது. யுத்தம் நிறைவுற்று 2010 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு பாரியளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டின் பிற்பாடு காட்டு வளம் 210 ஹெக்டேயர் வனப்பரப்பை இழந்துள்ளது. கூகுள் எர்த் வரைபடத்தின் படி டிசெம்பர் 2015 இற்குள் ஏறத்தாழ 2,208 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளன. முதிரை, பாலை, வீரை போன்ற பெரு மரங்களில் 70 வீதம் வரையானவை சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன என வனத் திணைக்களத்தின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

5. கண்டல் தாவர அழிப்பு

கண்டல்தாவரங்களின் வேர்கள் நண்டு, இறால், சிப்பி போன்ற பல்லுயிர்களின் பெருக்கத்துக்கான மையமாகும், இவற்றின் கிளைகள் பறவைகளின் தங்குதளம் ஆகும். சிறு மீன்கள், பறவைகள், ஊர்வன மற்றும் ஏராளமான பிற வனவிலங்குகளுக்கும் நீரின் மேற்பரப்பிற்கு மேலேயும், கீழேயும் ஏராளமான

உணவுகள் உருவாகும் தொழிற்பாட்டை இத்தாவரங்கள் மேற்கொள்கின்றன. துரதிர்ஷ்டவிதமாக சட்டவிரோத மீன்பிடித்தல், விறகு மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக மாவட்டத்தில் உள்ள சதுப்பு நில தாவரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.

6. வங்காலை பறவைகள் சரணாலயம்

வங்காலை பறவைகள் சரணாலயம் வறண்ட-மண்டல முள் புதர் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், கடல்-புல் படுக்கைகள், மணல் திட்டுகள், தடாகங்கள், அலை அடுக்குகள், சதுப்பு நிலங்கள், முதலிய-வற்றைக் கொண்ட அழகிய பிரதேசமாகும்.

இங்கு உள்நாட்டு பறவைகளும், வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்கின்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இவற்றைக் கண்டு களிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் எமது மாவட்டத்துக்கு வருகை தருதல் பொருளாதார வளர்ச்சிக்கான படிக்கல்லாகும்.

ஆனால், இந்த இடத்தின் அழகினையும், வரலாற்று முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளாத, புரிந்துகொள்ளாத மக்கள் தங்கள் வீட்டுக்கழிவுகளை (பொலித்தீன்-பிளாஸ்ரிக்) சரணாலயத்தின் உள்ளே கொட்டுவது விலங்குகளுக்கும், பல்லுயிர் காப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலான செயற்பாடாகும்.

எனவே மேற்கூறிய பிரச்சினைகள் மற்றும் சுரண்டல்களின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக் கண்டு வேதனை அடைகிறோம். மன்னார் வளங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். - என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# கறுவா செய்கை தொடர்பில் கிளிநொச்சியில் பயிற்சி





கிளிநொச்சியில் கறுவா செய்கையினை ஊக்குவிக்கும் விதத்தில் கறுவா விதை வழங்கப்பட்டு கறுவா உற்பத்தி தொடர்பான செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் உள்ள ஜெசுரன் என்பவரது வீட்டில் ஏற்கனவே நடுகை செய்யப்பட்டிருந்த கறுவாமரம் நல்ல வளர்ச்சிகண்டுள்ளது. இதனால் அந்தப் பிரதேசத்தில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் விதத்தில் கறுவாச் செய்கையை அறிமுகம் செய்யும் நிகழ்வு இன்று பிற்பகல் நடைபெற்றுள்ளது

இந்த விளக்கச் செயலமர்வில் நாற்றுக்களை உற்பத்திசெய்யும் செயல்முறையும் கறுவா உற்பத்தி தொடர்பான கருத்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜெயசிங்க மற்றும் கறுவா ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் வடமாகாணத்தின் கறுவா உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்ற முயற்சியோடு செயற்பட்டு வரும் புவன குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியதுடன் நாற்று மேடை அமைக்கின்ற முறை தொடர்பிலும் விளக்கம் அளித்தனர் இதே பயிற்சிகள் நாளை யாழ்ப்பாணத்திலும் வழங் கப்படவுள்ளன. (55)

## ஊர்காவற்றுறையில் 22 பவுண் நகை திருட்டு

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நயினாதீவு பகுதியில் 36 இலட்சம் ரூபாய் பெறுமதியான 22 பவுண் நகைகள் திருட்டுப் போயுள்ளன.

யாழ். மாவட்டம், நயினாதிவு ஐந்தாம் வட்டார பகுதியில் உள்ள வீடு ஒன்றில் செவ்வாய்க்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு பெண்கள் வசித்துவரும் அந்த வீட்டில் அவர்கள் உறக்கத்தில் இருந்தபோது கூரையைப்பிரித்து இறங்கிய திருடர்கள் கைப்பையில் வைக்கப்பட்டிருந்த 22 பவுண் நகைகளையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

காலையில் எழுந்து பார்த்தபோது கூரை பிரிக்கப்பட்டு, கைப்பை காணாமல்போய் இருந்தமையைப் பார்த்த உரிமையாளர்கள் பொலிஸில் முறையிட்டனனர்.

யாழ்ப்பாணம் தடயவியல் பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை நடத்தினர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிசார் நடத்தி வருகின்றனர்.

## தரம்பெற்ற அதிபர்கள் சங்க வடக்கு மாகாணக் கூட்டம்

தரம்பெற்ற அதிபர் சங்கத்தின் வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம் ஜூன் 19 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர். வடக்கில் அதிபர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆரயப்படவுள்ளதுடன் நிர்வாகக் கட்டமைப்பும் உருவாக்கப்படவுள்ளது என்பதையும் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அனைத்து தரம்பெற்ற அதிபர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டெங்கு அதிகரிப்புக் குறித்து புதிய பார்வை அவசியம்

**நாட்டினல் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பது பெரும் பிரச்சினையாக மாறி இருக்கின்றது. டெங்கைக் கட்டுப்படுத்த தேசிய அளவில் ஒரு செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு உதவியாக 9 மாகாணங்களிலும் 9 உப செயலணிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.**

**இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரையில் 44 ஆயிரத்து 540 பேரர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின்புள்ளிவிவரங்கள்தெரிவிக்கின்றன. இவர்களில் அரைவாசிப் பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். எனினும் நாட்டின் ஏனைய இடங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரித்தே காணப்படுகின்றது.**

**டெங்கைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் வீடுவீடாகச் சென்று சோதனையிடும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருக்கின்றனர். டெங்கு பரவக்கூடிய சூழலை வைத்திருந்தவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு அவர்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகின்றது.**

**வருடாவருடம் இத்தகைய முறைகளில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பாதிப்புத் தீவிரமாக இருக்கும்போது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் தீவிரமாகவும் அது குறையும்போது கட்டுப்பாட்டுநடவடிக்கைகள்மெத்தனமாகவும்இடம்பெற்று வந்திருக்கின்றன. அப்படியிருந்தும் இந்த ஆண்டு டெங்கு தேசியப் பிரச்சினையாக மாறியிருக்கின்றது.**

**அதுவும்நுளம்புகள்பெருகுவதற்கானசூழல்குறைந்த கடும் வெப்ப சூழல் நிலவும் கோடைக் காலத்திலேயே டெங்கின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கின்றது என்பது கவனத்திற்குரியது. கடும் கோடையிலேயே இவ்வளவு மோசமான நிலை இருக்கும் என்றால் மழை காலங்களில் அது இன்னும் பயங்கரமாக மாறுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.**

**ஆக, வீடுகளில் சோதனையிடுவதன் மூலம் மட்டும் டெங்கைக் கட்டுப்படுத்தும் உத்தி போதியதாகத் தெரியவில்லை. இந்தக் கோடையில் வீடுகளைச் சூழவுள்ள பகுதிகளில் நீர் தேங்கியிருந்தாலும் அவை வரண்டுவிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கும் நிலையிலும் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்திருக்கின்றது என்றால் அதற்கான காரணங்கள் வீடுகளைத் தாண்டியும் இருக்கவேண்டும். அவை குறித்துக் கவனம் செலுத்தி புதிய உத்திகள் வகுக்கப்படாமல் டெங்கைக் கட்டுப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை.**

**டெங்கைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்டுள்ள தேசிய செயலணி டெங்கைக் கட்டுப்படுத்தும் உத்தியாக, டெங்க பாதித்த ஒருவரில் இருந்து நுளம்பு மூலம் நோய் மேலும் பரவும் என்பதால் எல்லாக் காய்ச்சல் நோயாளர்களையும் கவனமாகப் பராமரிப்பதன் மூலம் டெங்கைக் கட்டுப்படுத்தும் உத்தியைப் பரிசீலித்துள்ளது. இது டெங்கின் பரவலைக் கட்டுப்படுத்த உதவக்கூடும். ஆனால் நுளம்புகளைக் கட்டுப்படுத்த உதவாது. எனவே டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் உத்திகள் குறித்து ஆராயப்படுவது அவசியம்.**

**மலட்டுத்தன்மை கொண்ட ஆண் நுளம்புகளைப் பரவ விட்டு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் உத்தி ஏற்கனவே பரீட்சார்த்த நிலையில் இருக் கின்றது. அதுபோன்ற நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்படுவதுடன்புதியஉத்திகளும்கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு சரியான, முழுமையான தீர்வு கிடைக்கும்.**

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

**என். சத்திய மூர்த்தி**



இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கேயுடன் பேச்சு நடத்திய தமிழ் அரசு கட்சி தலைமை, மீணடும் ஒரு முறை அவருக்கு சமகால சரித்திர வகுப்பு எடுத்து திரும்பி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு நூறு, ஐநூறு, ஐயாயிரம் என்று வரு டக்கணக்கில், தமிழர் சரித்திரம் குறித்து பேச துங்கினாலேயே, உடன் செல்லும் தமிழ்தலைவர்களே முணுமுணுப்புடன் தூங்கச் சென்று விடுவார்கள்.

தமிழ்தலைவர்களேஇப்படிஎன்றால், கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக, தமிழ் தலைவர் சம்மந்தனுக்கு சமமாக நாடாளுமன்றஅனுபவம்வாய்ந்தரணில் இந்தக் கதைகளை எத்தனை முறை கேட்டிருப்பார்? அது போன்றே, சிங்கள அரசியல்மற்றும்அரசதரப்புகளில்இருந்து இந்தப் பிரச்சினையை எவ்வாறெல்லாம் அணுகி இருப்பார்?

இவர்களில் யாருக்குமே, கைப் புண்ணைக் காண கண்ணாடி தேவையில்லை. அதிலும் குறிப்பாக, இவ்வாறு சீழ் பிடித்து, தசாம்சங்களாக இரத்தம் வழிந்தோடிவரும் புண்ணை திரும்பி, திரும்பி பார்க்க ஒரு பூத கண்ணாடியா? புரையோடிபோன அந்த புண்ணுக்கு தேவை, மருந்து. ஆனால், பழைய புண்ணை மீண்டும் மீண்டும் ஆறப்போட்டு பின்னர் அதனை குத்தி குத்திப் பார்ப்பதால், அந்த புண்ணால் அவதிபடுபவரே, அதிலிருந்து ஒருவித கொடூரமான இன்பத்தை அனுபவிக்க துவங்கி விட்டார் என்பதே பொருள்.

### விட்ட இடத்தில் இருந்து...

இந்த விடயத்தில், அன்று முதல் இன்று வரை, தமிழ் அரசு கட்சி யின் தலைமைகள், இந்த கொடூர இன்பத்தையே தங்களது அரசியல் முன்னெடுப்புகளின் அடுத்த கட்டமாக எடுத்துக்கொண்டுள்ளனர். இடைப்பட்ட 30 ஆண்டு காலத்தில், தமிழ் சமூகத்தி ற்கு தன்னிச்சையாக தலைமை அளித்து வந்த விடுதலைப் புலிகள் அமைப்பும் இந்தத் தந்திரத்தையே பின்பற்றி வந்தது. எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பு காணாமல் போய்விட்ட சமகாலத்தில், தமிழ் அரசு கட்சிக்கும் விட்ட இடத்தில் இருந்து, மீண்டும் பிடிப்பது, வசதியாக போய்விட்டது. பழகியும் போய்விட்டது.

தமிழர் தலைமையை, தமிழ் அரசு கட்சி, மற்றக் கட்சிகள் என்று இரண்டாக பிரிக்கலாம். பிரச்சினைக்கு முடிவு கூற தெரியவில்லை என்றால், அல்லது பிரச்சினை முடிவுக்கு வந்து விடக்கூடாது என்று அவர்கள் கருதும் கட்டங்களில், அவர்கள் ஒரு விதமான, ஆனால் ஒரே விதமான அணுகுமுறையை முன்னெடுப்பார்கள். அரசுடனோ அல்லது இந்தியா போன்ற நட்பு நாடுகளுடனோ பேச்சு நடத்தும் போதெல்லாம் அதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லாமல் இருப்பதற்கு ஆவன செய்வார்கள்.

**அதிலும் குறிப்பாக, இரட்டை அரசின் (நல்லாட்சி) காலத்தில், தமிழ் அரசுக் கட்சி, பிரதமர் ரணிலுக்குத் தொடர்ந்து ஜால்ரா அடித்துவிட்டு, இப்போது ஏதோ தாங்கள் மட்டுமே புனிதர்கள் என்று நடிப்பதற்கு என்ன அர்த்தம்? இவ்வாறெல்லாம், முட்டாளாக்கப்படுகிறோம் என்று தமிழ்ச் சமூகம், குறிப்பாக இளைய தலைமு-றையினர் ஆலோசிக்கத் தொடங்கியதால்தான், தமிழ் அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தேர்தல் வாக்கு விகிதம் தொடர்ந்து சரிந்து வருகிறது.**
**அந்த வகையில், இப்போது தனக்கென்று நாடாளு மன்ற மெஜாரிட்டி இல்லாத ஜனாதிபதி ரணிலிடம் புதி ய அரசமைப்புப் போன்ற நிறைவேற்ற முடியாத தி;ட்டங்கள் குறித்துப் பேசி அவரை திண்டாட வைப்பதில் தமிழ் அரசு தலைமைக்கு என்ன குஷி? அதிலும், தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளு மன்ற ஆதரவிலேயே அவர் தொடர்ந்து பிரதமர் பதவியில் இருந்தபோது, அதனைப் பயன்படுத்தி இவர்கள் சாதித்ததுதான் என்ன?**

பின்னர், 'அவர்களை நம்பி



கெட்டோம்' என்றும் பழிசொல்வார்கள். ஆனால், நாள்படாமலே, தலைநகர் கொழும்புவில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு மீண்டும் மீண்டும் படையெடுப்பார்கள்.

இவர்களில் தமிழ் அரசு தரப்பு, இப்படி கதைத்துகதைத்தே கதையை கெடுத்து வந்துள்ளது. விடுதலை புலிகள் உள்ளிட்ட புதிய, பழைய கட்சிகள் இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் கூறுவார்கள். இவர்களில் இருந்து கூட மூத்த கட்சியான தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசிய ம க்கள் கூட்டணியின் தலைவருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மூன்றாவதுரகம். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதே அவரது அசைக்க முடியாத நம்பிக்கை, அரசியல் முடிவு மற்றும் முன்னெடுப்புகளும் இதனை ஒட்டியே இருக்கும்.

### போட்டது போட்டபடி...

பொதுவாகவே, தமிழ்தலைமைகள் மீதுவெளிநாட்டவருக்குஇருக்கும்கருத்து இது தான்: 'இருதரப்பு பேச்சின்போது, தமிழ் அரசுத் தலைமையிடம் ஒரு காகிதத்ததையும் பேனாவையும் கொடுத்து, உடனடி பிரச்சினைகளில் ஐந்தை அடையாளப்படுத்தி, அவற்றை வரிசைபடுத்திக் கொடுத்தால் அவை குறித்து பேசலாம். என்று அவர்களிடம் கூறிப்பாருங்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இரட்டிப்பு ஆன பிறகும், அவர்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திய சரித்திரம் வரைகூட வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் சென்ற பிறகு, அவர்களிடம் கொடுக்கப்பட்ட காகிதமும்பேனாவும்போட்டதுபோட்டபடி அங்கேயே இருக்கும்.

தமிழ் அரசு தலைமைகள் இவ்வாறு என்றால், மற்றவர்கள் ஒவ் வொரு முறையும் புதிது புதிதாகப் பிரச்சினைகளைக் கிளப்பி அவற்றையே இனப்பிரச்சினைக்கான இடைக்கால முடிவு அல்லது முடிந்த முடிவு என்பது போலவும் கதைப்பார்கள். அந்த லிஸ்டில் தற்போது முன்னிலையில் இருப்பவர், விக்னேஸ்வரன்.

முதலமைச்சராக இருந்த ஐந்து ஆண்டுகளில், தனக்கு அப்போதைக்கு இருந்த அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ் சமூகத்திற்கு அவர் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. அவ்வாறு ம க்களுக்குச் சேவை செய்வதற்கான அதிகாரம் மாகாண முதல்வர்களுக்கு இல்லை என்றால், அந்தப் பதவிக்குப் போட்டியிட்டு, அதீத வாக்குகளுடன் வெற்றியும் பெற்று, அடை கோழி போல், அந்த பதவியை இறுதி வரை ஏன் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்தார்? ஆனால், இந்த கேள்வியை தமிழ் வாக்காளர்களே அவரிடம் கேட்பதில்லை.

தற்போது, விக்னேஸ்வரன், அரச தரப்பால் தொடர்ந்து இழுத்தடிக்கப்படும் மாகாண சபை தேர்தல் நடைபெறும் வரை, ஆளுநருக்கான ஒரு ஆலோசனை சபையை நியமிக்கலாம் என்ற கருத்தை முன்வைத்து, அது குறித்து பிரச்சாரமும்செய்துவருகிறார். அந்த பிரச்சாரம் சூடு பிடிக்கும் முன்னரே, காணாமல் போய்விட்டது என்பது வேறு விடயம்.

விக்னேஸ்வரனின் கருத்தை பிற தமிழர் கட்சிகளே ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஒருபுறம். என்றாலும், அரசு அவரது கருத்துப்படி செயலாற்றினாலும், விக்னேஸ்வரன்கூறும்யாரையுமே அந்த ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்போவதில்லை. பின்னர், மீண்டும், 'சீசீ...இந்தபழம்புளிக்கும்' கதைதான்.

### பெரியவர், சிறியவர்?

கடந்தசில-பலமாதங்களாகவே தமிழர் தரப்பு மாகாண சபைத் தேர்தலைநடத்துவதற்கு அழுத்தம் கொடுப்பதற்குக் காரணமே, தங்களில் யார் பெரியவர், யார் சிறியவர் என்று கொழும்புவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துச் சொல்வதற்குத்தான். குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணாமல் போன பின்னர், அதன் உறுப்புக் கட்சிகளில் தமிழ் அரசு ஒரு புறம், பிற கட்சிகள் மறு புறம் என்று ஆன பிறகு, தங்களுக்கும் பலப் பரிட்சை நடத்துவது இரு தரப்பினருக்குமே அவசியமாகிறது.

இதே அவசியம், வெவ் வேறு காரணங்களுக்காக, விக்னேஸ்வரன், கஜன் பொன்னம் பலம் தரப்புகளுக்கும் கட்டாயமாகி உள்ளது. அதனால்தான், மாகாண சபைத் தேர்தல் குறித்து அவர்களுக்கு இவ்வளவு கரிசனை.

உண்மையிலேயேமாகாணசபைத் தேர்தலே, தமிழ் மக்களின் அபிலாசை-களைத் தெளிவுபடுத்தும் என்று அவர்கள் உண்மையிலேயே கருதியிருந்தால், இந்தக் கோரிக்கையையும் அது குறித்த போராட்டங்களையும் ஏன், மைத் திரி-ரணில் இரட்டை அரசின் காலத்தில் முன்னெடுக்கவில்லை? 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்ற கணக்கில், இப்போது, ரத-கஜ-துரகபதாதிகளை இழந்து நிற்கும் ஒரு ஜனாதிபதியிடம் தற்போதைய அறிவிப்புகளுக்கு அப்பால் அவர்கள் என்னதான் எதிர்பார்க்கிறார்கள்?

அதிலும் குறிப்பாக, இரட்டை அரசின் (நல்லாட்சி) காலத்தில், தமிழ் அரசுக் கட்சி, பிரதமர் ரணிலுக்குத் தொடர்ந்து ஜால்ரா அடித்துவிட்டு, இப்போது ஏதோ தாங்கள் மட்டுமே புனிதர்கள் என்று நடிப்பதற்கு என்ன அர்த்தம்? இவ்வாறெல்லாம், முட்டாளாக்கப்படுகிறோம் என்று தமிழ்ச் சமூகம், குறிப்பாக இளைய தலைமுறையினர் ஆலோசிக்கத் தொடங்கியதால்தான், தமிழ் அரசு மற் றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தேர்தல் வாக்கு விகிதம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

அந்த வகையில், இப்போது தனக்கென்று நாடாளுமன்ற மெஜாரிட்டி இல்லாத ஜனாதிபதி ரணிலிடம் புதிய அரசமைப்புப் போன்ற நிறைவேற்ற முடியாத தி;ட்டங்கள் குறித்துப் பேசி அவரை திண்டாட வைப்பதில் தமிழ் அரசுதலைமைக்குஎன்னகுஷி? அதிலும், தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளு மன்ற ஆதரவிலேயே அவர் தொடர்ந்து பிரதமர் பதவியில் இருந்தபோது,

(7ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir




காலைக்கதிர் Kalaikkathir

## கருத்துரிமையைப் .....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

அதன்போது, ஊடகங்களுக்கு பாதகம் ஏற்படாமல் இருக்க வழிகாட்டுதல்கள் உள்ளன. அந்த வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப செயற்படவேண்டும்.

இதை ஐக்கிய இராச்சியத்தின் சொற்களின் மூலமே தெரிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு நான் தெரிவித்துள்ளேன். ஏனெனில் அங்கு நாம் முடிவுகளை எடுப்பதில் முன்னுதாரணங்களைப் பெற முடியும்.

அதேபோன்று, மேலும் பல கேள்விகள் உள்ளன. சில ஊடகங்களுக்குச் செய்திகளைத் தெரிவிப்பதற்கான உரிமம் கூட வழங்கப்படவில்லை. ஒரு சிலருக்கு கல்வி அனுமதிப் பத்திரமே உள்ளது. இவை அனைத்தையும் சரிசெய்வதே எங்கள் நோக்கம். அதுவன்றி வேறொன்றுமில்லை.

ஒலிபரப்பு உரிமங்களை இரத்துச் செய்யும் அதிகாரம் அமைச்சருக்கு தற்போதும் உள்ளது. எவரும் நீதிமன்றத்திற்குச் சென்று நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்பை இந்தச் சட்டம் முன்மொழிகிறது. நீதிமன்றத்திற்கு செல்லும் பிரேரணைக்கு எதிராக இருந்தால் அந்த அதிகாரத்தை அமைச்சரிடம் வைத்திருக்கச் சொல்லுங்கள். இதை ஒரு பொறிமுறைக்கு ஏற்ப முன்னோக்கிக் கொண்டு செல்லவே நாம் முயற்சிக்கிறோம்.

ஒரு சில நாடுகளில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமம் புதுப்பிக்கப்படுகிறது. இது வேறு எதற்கும் அல்ல, வருமானம் பெறுவதற்காக. இந்த அனைத்து உரிமங்களையும் நாங்கள் இலவசமாக வழங்கினோம். அதைப்பெற்ற சிலர் அவற்றை விற்றுவிட்டனர். இலாபம் நாட்டிற்கு கிடைக்கவில்லை, அவர்களின் சட்டைப் பைகளுக்கே அது சென்றது.

இந்த முறைக்கு யாரும் பயப்படவேண்டாம். இலத்திரனியல் ஊடகங்கள் எனது வீட்டை எரித்தது மட்டுமல்லாமல் பெறுமதி மிக்க சுமார் 3000 புத்தகங்களையும் அழிந்தன. அது எனக்கு ஏற்பட்ட நட்டம். இப்போது, வீடுகளை எரிக்கும் அனுமதிப்பத்திரம் வேண்டும் என்றா கேட்கிறார்கள்? - என்றார்.

## உணவுப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

66,000 ஆக இருந்தது. உணவுப் பாதுகாப்பின் முன்னேற்றம், சிறந்த உணவு நுகர்வில் இருந்து உருவாகிறது.

இது உணவுப் பொருட்களின் விலை குறைப்பு மற்றும் அறுவடை காலத்தில் விவசாய சமூகங்களிடையே மேம்பட்ட வருமானம் ஆகியவை காரணமாக இருக்கலாம்.

இந்த நேர்மறையான போக்கு இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் குறிப்பாக கிளிநொச்சி, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்றவற்றில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகமாகவே உள்ளது.

தோட்டத் துறையில் உள்ள சமூகங்களுக்குள்ளும், சமுர்த்தி போன்ற சமூக உதவித் திட்டங்களை நம்பியிருக்கும் தினசரி கூலித் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்கள் மத்தியிலும் மிக உயர்ந்த அளவிலான உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது.

2022-2023 இல் இரண்டு முக்கிய பயிர் பருவங்களில் அரிசி மற்றும் மக்காச்சோளம் உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தி கடந்த ஐந்தாண்டு சராசரியை விட 14 சதவீதம் குறைவாக 4.1 மில்லியன் தொன்களாக இருக்கும்.

சிறு விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உரங்கள், பலதரப்பு மற்றும் இருதரப்பு நன்கொடை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி மூலம், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## போதகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெர்ணான்டோ மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனு நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித்த ராஜகருணா மற்றும் ஏ. மரிக்கார் ஆகிய நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டவாதி ஷமிந்த விக்ரம மேற்கண்ட விடயத்தை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார்.

குறித்த மனு பரிசீலனைக்கு வந்த போது, இந்த மனுவை விசாரணைக்கு எடுக்கக்கூடாதென அரசதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி சமிந்த விக்ரம அடிப்படை ஆட்சேபத்தை முன்வைத்ததோடு குறித்த மனு ஊடாக மனுதாரர், முக்கியமான விடயங்களை மறைத்துள்ளார் எனவும் கூறினார்.

அத்துடன் மனுவில் உள்ள சில விடயங்கள் நீதிமன்றை தவறாக வழி நடாத்தும் வண்ணம் உள்ளன என்றும் மனுதாரர் தனது மனுவில், ஊடக அறிக்கைகளை மையப்படுத்தி தன்னைக் கைது செய்ய முயற்சிக்கப்படுவதாகவும் அவர் அவரது மனுவை ஊடக அறிக்கைகளை மையப்படுத்தியே தாக்கல் செய்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மேற்படி மனுதாரருக்கு எதிராக கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் இருட்டடிப்புத் தன்மை இந்த மனுவூடாக வெளிப்படும் நிலையில், இம்மனுவை விசாரணைக்கு ஏற்காது நிராகரிக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு மன்றைக் கோரினார்.

இந்நிலையில், இந்த எழுத்தாணை மனு தொடர்பில் இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ள எல்லே குணவங்ச, பெங்கமுவ நாலக தேரர்கள் சார்பில் மன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜராகி வாதிட்டார்.

இதன்போது, சட்ட மா அதிபருக்காக ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் போதகர் ஜெரோம் பெர்ணான்டோவுக்கு எதிராக தண்டனை சட்டக் கோவை மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடப்பதாக உயர் நீதிமன்றில் தெரிவித்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன குறிப்பிட்டார்.

இந்த விடயத்தை மனுதாரர், இந்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்யும் போது மறைத்துள்ளதாகவும், இது நீதிமன்ற அதிகாரத்தை மனுதாரர் தவறாக அனுபவிக்க முயன்றுள்ளமையை வெளிப்படுத்துவதாகவும் அதனால் மனுதாரரின் இந்த ரிட் மனுவை ஆரம்ப கட்டத்திலேயே நிராகரிக்க வேண்டும் எனவும் கோரினார்.

இதனையடுத்து மேற்படி மனு மீதான பரிசீலனைகள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன. அன்றைய தினம் போதகர் ஜெரோம் பெர்ணான்டோ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்ரமநாயக்க தனது வாதங்களை முன்வைக்கவுள்ளார்.

## தங்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை பதவியிலிருந்து நீக்குவதற்கான யோசனையைக் கொண்டு வருவது தொடர்பில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவில் கட்சித் தலைவர்கள் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது - என்றார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்டவிரோதமான முறையில் ஏழரை கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளுடன் துபாயில் இருந்து நாடு திரும்பிய போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

## பௌத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழலில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சை தொடர்பில் மட்டக்களப்பில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கூட்டத்தில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருளுக்காக ஒதுக்கிய காணியை விடுவிப்பதற்குப் பின்னடித்தார். காணியை விடுவிக்கும்படி வடக்கில் உள்ள அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்ப முடியாது. என அவர் தெரிவித்தபோது ஜனாதிபதி அவரிடமிருந்து இராஜினாமா கடிதத்தை தருமாறு வாங்கியிருந்தார்.

உண்மையில் இவை அனைத்துக்கும் பொறுப்பு அமைச்சர் விதுர விக்கரம நாயக்கதான். அவர்தான் பணிப்பாளரைத் தவறான பாதையில் நடத்தியவர். குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைப்பதற்கும் விகாரை கட்டுவதற்கும் இராணுவத்துடன் சேர்ந்து விதுர விக்கரமநாயக்கதான் பின்னணியில் முக்கியமாக செயற்பட்டவர். அவ்வாறு மட்டக்களப்பில் குசனார் மலைக்கு வந்தபோது பாரிய எதிர்ப்பு தெரிவித்து விரட்டியடித்தோம். அதனால் இங்கு அந்தத் திணைக்களத்தின் தொல்லை குறைவு.

முன்னாள் பிரதமரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மகனான விதுர விக்கிரமநாயக்க ஒரு இனவாதி. அவர்தான் இந்தப் பிரச்சினையின் மூல காரண கர்த்தா. ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரைப் பார்த்து முடியாவிட்டால் பதவியை விட்டுவிட்டுச் செல்லுங்கள் என்று கூறியது நல்லவிடயம்தான். ஆனால், இந்த நிலைக்குக் காரணமான அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவை ஏன் ஜனாதிபதி இதுவரையில் கண்டிக்கவில்லை. அவரை அமைச்சர் பதவியில் இருந்து விலக்கவேண்டும்.

அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க செருப்பு போட மாட்டார் அதனால் ஒரு புண்ணியவானாக மாற முடியாது. சிவன் ஆலயத்தை உடைத்து விட்டு அதில் புத்தர் சிலையை வைத்து கும்பிட்டால் கடவுளுக்கே பொறுக்காது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



# கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான ஆய்வின் பிரகாரமே கடன்மறுசீரமைப்புச் செயன்முறை

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு



பொருளாதாரக் குறிகாட்டிகள் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவேகமாக முன்னேற்றமடைந்து வருகின்றபோதிலும், சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான ஆய்வின் பிரகாரமே கடன்மறுசீரமைப்புச்செயன்முறை முன்னெடுக்கப்படுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பெரும்பாகப் பொருளாதாரசுட்செயற்றிட்டத்தில்எதிர்வுகூறப்பட்டதை விடவும் மிகவேகமாக நாட்டின் பணவீக்கம் வீழ்ச்சியடைந்திருப்பதுடன்,நாணயமாற்றுவீதமும் சாதகமான மட்டத்தை அடைந்திருக்கின்றது.

அதேபோன்று கடந்த மார்ச் மாதம் அடையப்படுமென எதிர்பார்க்கப்பட்ட சில பொருளாதார இலக்குகள் உரிய காலப்பகுதியில் அடையப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் 'கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதற்கு மேலும் சில இலக்குகளை அடைந்து கொள்ளவேண்டியிருக்கின்றது' என்று ஆளுநர் நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளின் முதலாவது மீளாய்வுச்செயன்முறை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதன்பின்னர் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் மறுசீரமைப்புக்கள் என்பன தொடர்பான நிபந்தனைகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படக்கூடும் என்றும் அவர் எதிர்வுகூறியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முன்னெடுக்கப்படவுள்ள மீளாய்வுஜூன் மாதத்துக்குரிய தரவுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

அதேவேளை செப்ரெம்பர் மாதத்துக்குள் கடன்மறுசீரமைப்புச்செயன்முறையை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. - என்றார். (05)

# தேசியக் கடன் மறுசீரமைப்பு, வரி அறவீட்டு முறைமை தளர்வுகள் தொடர்பாக அரசு வலியுறுத்த வேண்டும்

## நாணய நிதியத்திடம் என்கிறார் எரான் விக்கிரமரத்ன



சர்வதேச நாணய நிதியத்துடன் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள பேச்சின் போது தேசிய கடன் மறுசீரமைப்பு மற்றும் வரி அறவீட்டு முறைமை என்பவற்றில் தளர்வுகளை ஏற்படுத்தல் தொடர்பாக அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதன் போது வரி அறவீட்டு முறைமை மற்றும் தேசியக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் பல தரப்பினராலும் வலியுத்தப்பட்டுள்ள விடயங்களில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

வரி அறவிடப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். காரணம் அது அரசாங்கத்தின் பிரதான வரி மூலமாகும். ஆனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் இந்த வரி அறவீட்டு முறைமையிலிருந்து விடுக்கப்பட வேண்டும். எனவே, தற்போது மாத வருமானமாக ஓர் இலட்சம் பெறுவோர் வருமான வரி செலுத்த வேண்டும் என்று காணப்படும் ஏற்பாட்டை இரண்டு இலட்சமாக்க வேண்டும்.

அதேபோன்று கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சின் போது தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையில் பாதிப்பு ஏற்படாத வகையில், வங்கி கட்டமைப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

இவை அனைத்தும் ஜனநாயகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும். சர்வாதிகாரத்துக்கு இடமளிக்காது ஜனநாயக பொறிமுறையைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்னின்று செயற்படும். - என்றார். (05)

# தகராறில் ஈடுபட்டவர்களைப் பயமுறுத்துவதற்கு ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கைது

தகராறில்ஈடுபட்டவர்களைபயமுறுத்துவதற்காக ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிபிரயோகத்தில் ஈடுபட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீடி அபயரட்ண கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹொரண பொரலுகொடவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் உள்ள முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரின் நிலத்தை பராமரிப்பதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட தம்பதியினரிடம் வேறு எவரையும் அங்கு அழைத்துவரவேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் 14 ஆம் திகதி அவர் அந்த பகுதிக்கு சென்றவேளை அவரது காணியில் வேறு பலர் காணப்பட்டுள்ளனர். இதன் பின்னர் அவருக்கும் அந்தக் குழுவினருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு;ள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர்களை எச்சரிப்பதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகாயத்தைநோக்கித்துப்பாக்கிபிரயோகத்தைமேற் கொண்டுள்ளார். இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இதன்பின்னர் விசாரணை செய்த பொலிஸார் 70 வயதுடைய முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரைக் கைதுசெய்ததுடன் துப்பாக்கி யொன்றை மீட்டுள்ளனர். (05)




# கால்நடைகளிடையே தோல்கழலை நோய் தீவிரம்: ஜம்இய்யதுல் உலமாவுக்கு ஹலீம் அவசர கடிதம்



நாடளாவிய ரீதியில் கால்நடைகளிடையே தோல் கழலை நோய் பரவி வருகிறது. முஸ்லிம் மக்கள் NFBV கடமையைநிறைவேற்றத் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் கால்நடைகளிடையே இந்த நோய் பரவல் காரணமாக NFBVவுக்காக மாடுகளைப் பயன்படுத்துவது நாட்டில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும்.

இந்நிலையில் இது தொடர்பில் மார்க்க வழிகாட்டுதலை வழங்க வேண்டும்என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீம் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

நாட்டில் பரவலாக கால்நடைகளிடையே தோல்கழலை நோய் இனங்காணப்பட்டுள்ளதாகப் பிராந்திய மிருகவைத்தியப் பிரிவுகள் மூலம் தெரிவிக்கப்படுவதைப் பொறுப்புள்ள சிவில் சமூக அமைப்பு என்ற வகையில் ஜம்ஆய்யத்துல் உலமா அறிந்திருக்கும். இந்த நோய்த் தொற்றின் விளைவுகள் பற்றியும் தற்போது பரவலாகப் பேசப்படுகிறது.

இந்நிலையில் நாம் புனித துல்ஹஜ் மாதத்தை அடையவிருக்கிறோம். மேலும் ஹஜ்ஜுப் பெருநாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

முஸ்லிம் மக்கள் NFBVவுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர். NFBVவுக்கான மிருகங்களில் இலங்கையில் பிரதானமாக மாட்டை வழங்குவதையே பெரும்பாலும் நாம் வழமையாகக் கொண்டுள்ளோம்.

நோய்தொற்று தீவிரமாகியுள்ள நிலையில் மாடுகளை NFBVவுக்காக பயன்படுத்துவது பாரிய விளைவுகயை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பான மார்க்க வழிகாட்டுதல் அவசியப்படுகிறது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெளிவான விளக்கத்தை வழங்குவதுகாலத்தின் கட்டாயமாகும்.

அத்தோடு உடனடியாக மார்க்கத் தீர்ப்பொன்றை அறிவித்து எதிர்நோக்கவிருக்கும் பிரச்சினைகளிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற வழிவகுக்க வேண்டும்.

மேலும், இது தொடர்பாக வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழுகையையடுத்து மக்களுக்கு தெளிவூட்டல் வழங்குவதற்கும் பள்ளிவாசல்களுக்கு முறையான வழிகாட்டுதல் வழங்குவதற்கும் அகில இலங்கை ஜம்ஆய்யதுல் உலமா ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# அமெரிக்காவிடமிருந்து 46 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள், உபகரணங்கள் கிட்டும்



அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ உதவித் திட்டத்தால் 46 மில்லியன் டொலர்பெறுமதியுடைய அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவை அடுத்த மாதமளவில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று குறித்த வேலைத் திட்டத்தின் செயற்பாட்டு மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம், சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக, அவசரகால மருந்துகள் மற்றும் பிற மருத்துவப் பொருள்கள் நன்கொடையாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு உதவ தன்னார்வத்துடன் செயற்படும் குறித்த நிறுவனத்தை பாராட்டிய பிரதமர், அவர்கள் நாட்டுக்கு அளித்து வரும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார்.

அவசர காலத்தில் வழங்கப்படும் இந்த மருத்துவ உதவி இலங்கையர்களுக்கு பாரிய நிவாரணமாக அமையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# தொல்பொருள் மரபுரிமைக்கு எதிரான ரணிலின் கருத்தை பெரமுன ஏற்குமா?

## கிண்டிவிடுகிறார் கம்மன்பில



சிங்கள பௌத்த தனித்துவத்தை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவினர் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வார்களா? ஜனாதிபதியின் முறையற்ற செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுனவினர் பொறுப்புக் கூற வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

புறக்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவிரோத கட்டளையை ஏற்க மறுத்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அநுர மனதுங்க தற்துணிவுடன் பதவி விலகியுள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்தை மாத்திரம் செயற்படுத்த வேண்டிய தேவை தொல்பொருள் திணைக்களத்துக்குக் கிடையாது.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் விடயதானங்களுக்கு அமையவே தொல்பொருள் திணைக்களம் செயற்பட வேண்டும். அதனை விடுத்து ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய செயற்பட முடியாது. குறுந்தூர் மலைக்கு 275 ஏக்கர் நிலப்பரப்பு காணி அவசியமற்றது.

நிலப்பரப்பை குறைக்குமாறு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மறுத்துள்ளார்.

'வரலாற்றை நீங்கள் எனக்கு குறிப்பிடுகின்றீர்களா அல்லது நான் உங்களுக்கு வரலாற்றை கற்பிக்கவா,' என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை நோக்கி குறிப்பிட்ட கருத்து தற்போது சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பரிமாற்றப்படுகிறது.

தவறான வரலாற்றை குறிப்பிட்டு நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வடக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஆனால் குறுந்தூர் விகாரை கி.மு. 110-103 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள அரசனால் நிர்மாணிக்கப்பட்டது என தொல்பொருள் சான்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன.

மகாவிகாரையை காட்டிலும் குறுந்தூர் விகாரையின் நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டிய தேவை இல்லை என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். மகா விகாரையின் நில அளவை மற்றும் தொல்பொருள் மரபுரிமைகள் அளவீட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஆகவே, அநுராதபுரம் மகாவிகாரையுடன் குறுந்தூர் விகாரையை ஒப்பிட முடியாது. குறுந்தூர் மலையில் தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில் நாட்டப்பட்ட நில அளவை தூண்களை அகற்றுமாறு ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளின் கட்டளைக்கு அமைய ஜனாதிபதி செயற்படுகிறார். அரசியல்வாதிகளின் ஆலோசனைக்கு அமைய தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தால் 1979 ஆம் ஆண்டு விடுதலைபுலிகளால் அழிக்கப்பட்ட கிரிவெட்டி விகாரைக்கு நேர்ந்த கதியே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளுக்கு நேரிடும்.

பௌத்த சிங்கள தனித்துவத்தை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவினர் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கம் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வார்களா? ஜனாதிபதியின் செயற்பாடுகள் பொதுஜன பெரமுனவுக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது. - என்றார். (05)

# ஆற்றைக் கடப்பதற்காக மொட்டுக் கட்சியினர் பயன்படுத்திய மரக்குற்றியே ஜனாதிபதி ரணில்

## அஜித் பி பெரேரா சாட்டை



மொட்டு கட்சியினர் தமது அரசியல் கட்சியை ஜனாதிபதிக்கு விற்பனை செய்வதற்கு தயாரில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆற்றை கடப்பதற்காக மொட்டு கட்சியினரால் பயன்படுத்தப்பட்ட மரக்குற்றி மாத்திரமே.

அந்த மரக்குற்றி மீதேறி மொட்டு கட்சியினர் கரையை அடைந்ததன் பின்னர், மரக்குற்றியை கைவிட்டு விடுவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

தற்போது ஒன்று மாத்திரம் தெளிவாகிறது. மொட்டு கட்சியினர் தனது அரசியல் கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விற்பனை செய்வதற்குத் தயாரில்லை.

மொட்டு கட்சியின் மாவட்ட தலைவர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு வரவில்லை. இதிலிருந்து அவர்கள் வழங்கியுள்ள செய்தி என்ன? எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாமையால் வரவில்லை, எமக்கு வழங்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

அவர்கள் திருடர்கள் கூட்டத்தினர். மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்த அணியினர். நாட்டை அழிப்பதற்கு கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக செயற்பட்ட தரப்பினர். இதன் காரணமாகவே அவர்களுக்கு பதவிகளை வழங்க முடியாது என ஜனாதிபதி கூறுகிறார்.

இந்த போராட்டம் எங்கு நிறுத்தப்பட்டுள்ளது? தோல்வியடைவதற்கேனும் மொட்டு கட்சியினர் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக சாகர காரியவசம் தெரிவித்த கருத்துகளில் அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றை கடப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மரக்குற்றியொன்று மாத்திரமே. அந்த மரக்குற்றியின் மீது ஏறி மொட்டு கட்சியினர் ஆற்றை கடந்ததன் பின்னர், மரக்குற்றியைக் கைவிட்டுவிடுவார்கள்.

மொட்டு கட்சியுடன் பயணிப்பது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கனவு மாத்திரமே. - என்றார். (05)

# சதி நடவடிக்கைகள் மூலம் சில குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன

## ருவான் சாடல்



நாட்டில் ஸ்திரதன்மையேற்பட்டுள்ளதால் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட சில குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன என ஐக்கியதேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தவேளை ஜனாதிபதி பொறுப்பை தற்போதைய ஜனாதிபதி பொறுப்பேற்றார் எனத் தெரிவித்துள்ள அவர், அவ்வேளை ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிற்கும் ஜேவிபி தலைவருக்கும் பிரதமர் பதவியை வழங்க முன்வந்தார். ஆனால் அவர்கள் அனைவரும் அதனை ஏற்க மறுத்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியதேசியகட்சியின் தலைவர் அதனை ஏற்றுக்கொண்டு நாட்டில் ஸ்திரதன்மையை ஏற்படுத்தியுள்ளார். எனினும் எதிர்க்கட்சி உட்பட சில குழுக்கள் சதிவேலை மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# 'மொட்டு' முரண்டு பிடித்தால் நாடாளுமன்றம் கலையுமாம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியை முன்னெடுப்பதற்குச் சிக்கல் ஏற்படுத்தினால் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசீலித்து வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி லொக்குகே, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன உள்ளிட்ட தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதிக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றது.

மொட்டுக் கட்சியின் இந்த நகர்வால் ஜனாதிபதி அதிருப்தி அடைந்துள்ளார்.

தான் அழைத்த கூட்டத்தை மொட்டுக் கட்சியின் மாவட்ட தலைவர்களைப் புறக்கணித்தமை தொடர்பாகவும் ஜனாதிபதி கடும் கோபத்தில் உள்ளார் என்று தெரியவருகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துக்கு மொட்டுக் கட்சியால் சவால் விடுக்கப்படும் பட்சத்தில், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# எமது ஆதரவு உங்களுக்கே!

## ரணிலிடம் 'மொட்டு' சத்தியம்

நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்துக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, பொதுச் செயலாளர் சாகர காரியவசம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் டிரான் அலஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்டோர் சந்திப்பில் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குத் தெரியாமல் அரச நிகழ்ச்சிகளுக்கு தமது உறுப்பினர்களை அழைப்பது பொருத்தமற்றது என அக்கட்சியின் தலைவர்கள் அங்கு சுட்டிக்காட்டினர்.

அண்மையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கான விசேட கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி அழைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஐ.தே.கவை எவராலும் அழிக்கவே முடியாதாம்

## பெருமிதமடைகின்றார் பாலித

ஐக்கியதேசியக்கட்சியை எந்தச் சக்தியாலும் அழிக்கவே முடியாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

வங்குரோத்து நிலையில் இருந்து எமது நாட்டை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரே மீட்டார். அன்று முதல் இன்று வரை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை செய்த ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சிதான். அந்தக் கட்சியை அழிக்கவே முடியாது.

தற்போது தேசப்பற்று குறித்து கதைப்பவர்கள், தேசம் ஆபத்தில் இருந்த போது பொறுப்பேற்க முன்வரவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காகச் சவாலை ஏற்றார். - என்றார்.

# விகாரைக்கு அருகில் காணி வழங்கினால் இனவாதிகள் குடியேற்றம் உருவாகுமாம்

இனவாதப் போராட்டங்களை ஆதரிக்கும் மக்களுக்கு விகாரைகளுக்கு அருகில் காணிகளை வழங்குவது பொருத்தமல்ல. அப்படி வழங்கினால் இனவாதிகளுக்கு அங்கு குடியேற்றம் உருவாகும் என்று ஜனாதிபதிக்குத் தான் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார் எல்லாவலே மெத்தானந்த தேரர்.

முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து மெத்தானந்த தேரர் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

குருந்தூர் மலையைச் சூழவுள்ள காணிகள் இனவாதப் போராட்டங்களை ஆதரிக்கும் மக்களின் கைகளுக்குச் சென்றால் எதிர்காலத்தில் மிக ஆபத்தான சூழலுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

குருந்து விகாரைக்குச் சொந்தமான காணிகளை மக்களுக்கு வழங்கவுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றேன். பல்வேறு விகாரைக்குரிய பௌத்த தொல்லியல் எச்சங்கள் அங்கு சிதறிக் கிடப்பதால் காணிகளைப் பொது மக்களிடம் ஒப்படைப்பது முறையல்ல.

ஆட்சியாளர்கள் காணிகளை வழங்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பலாத்காரமாகக் காணிகள் அபகரிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றன. அது எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இந்தக் காணிகளின் உரிமத்தை அரசிடமிருந்து மாற்றக்கூடாது - என்று மெத்தானத்த தேரர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

# நெஞ்சு பொறுக்குதில்லையே............

*(4ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*அதனைப் பயன்படுத்தி இவர்கள் சாதித்ததுதான் என்ன?*

*குறிப்பாக, ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையே பனிபோர் தொடங்கி, அது பிரதமரின் பதவி நீக்கம் வரை சென்றபோது அவருக்கு ஆதரவாக இருந்த கூட்டமைப்பு சொன்னது என்ன? 'தற்போதைய போராட்டம், நாட்டில் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்தது. இனப்பிரச்சினை குறித்து அழுத்தம் கொடுப்பதற்கு இது சரியான சந்தர்ப்பம் அல்ல' என்றுதானே ஒவ்வொரு தடவையும் அவர்கள் ரணிலுக்கு ஒத்தட்டம் கொடுத்தார்கள். என்றாலும், அந்த காலகட்டத்திலும், ஒன்றுமே நடவாதது போலவும், ஒன்றுமே தெரியாத அப்பாவிகள் போலவும், அரசமைப்பு சபையில் பங்கெடுத்து, புதிய அரசியலமைப்பு சட்டத்தின் வரைவு திட்டத்தையும் ரணிலுடன் இருந்து எழுதி முடித்துவிட்டு, அதனை செயல்படுத்த எந்த வித அழுத்தமும் கொடுக்காமல், இப்போது, 'குய்யோ, முறையோ' என்று கத்துவதும் கதறுவதும் எதற்கான? யாரை ஏமாற்றுவதற்காக? உண்மை என்னவோ, பிரதமர் ரணிலால் செய்யமுடியாத விடயத்தை, ஜனாதிபதி ரணிலால் தற்போது செய்யவே முடியாது. என்றாலும், அதனை ஊதிஊதி பெரிதாக்கி விட்டுவிட்டு, அதில் அரசியல் குளிர்காய நினைப்பவர்கள் குறித்து என்ன சொல்ல?*

*'நெஞ்சு பொறுக்குதில்லையே. இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்...'*

*- பாரதியார்*

காலைக்கதிர்
Kalaikkathir




# வாசிப்பும் மொழியறிவும்

செல்வி.டிலுக்ஷி அன்ரன் டேவிட்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

மெல்லின உதடும், இடையின நாக்கும், வல்லின பல்லும் எணைந்து பிறந்த அழகிய செந்தமிழே சீராய் விளங்கிட சீர்கள் பல வகுத்து அணியென பிரித்த பாவுக்கு உருவெட்ட யாப்பின் அழகைக் கண்டு இரசித்தேன். உன் உள்ளார்ந்த இலக்கிய நடையிலும் இலக்கண சுவையிலும் என்னையே மறந்தேன். என் தமிழ்த் தேன். படிப்பவரையே தன்னிலை மறக்கச் செய்யும் ஆற்றல் என் தமிழுக்கு உண்டு என்கின்றார பாவேந்தர பாரதிதாசன். அவர் அவ்வாறு கூறுவதற்கான காரணங்களாக அவர் தமிழ் மீது வைத்துள்ள பற்றும் வாசிப்பும் அதன் மொழியறிவும் என்றே கூறலாம்.

பண்டைய பெயரும் புகழும் உலகமே திரும்பிப் பாரக்குமளவு கலாசார விழுமியமும் பார்போற்றும் கலைநயமும் உடையன மொழிகள். மற்றவரகளுக்கு மொழி என்பது பயன்பாட்டுக்கு மட்டுமே உதவுகின்றது. ஆனால் மொழி உணர்வோடு கலந்தது. தாயாகவும் தெய்வமாகவும் போற்றப்படக்கூடிய மொழிகளும் உண்டு. அவற்றிற்கு முதன்மையானது வாசிப்பு. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் இதன் கருத்து வாசிப்பதனால் மட்டுமே ஒரு மனிதன் முழுமையடைகின்றான் என்பதாகும். எனவே இன்றைய காலத்தில் வாசிப்பும் மொழியறிவும் மிகையாகாது ஆகும்.


வாசிப்பும் மொழியறிவும் என்பது ஒரு மனிதன் ஐம்புலனால் பெறுகின்ற அறிவிலும், பெறுகின்ற அறிவின் தெரிவிலும், தெரிகின்ற அறிவின் தெளிவிலும் சார்ந்து நிற்பதுதான். இவற்றால் மட்டுமே நடுநிலை எனும் பணியை செப்பமுற செய்ய முடியும். இப்படி செய்வதற்கு திட்டமான மனத் திண்மையும் நுட்பமான செயல் வன்மையும் வேண்டும் என்கின்றார் விபுலானந்தர். தற்கால சமூகத்தில் வாசிப்பும் மொழியறிவும் எனும் விதை அற்றுப்போகுமானால் எதிர்கால சமுதாயம் எனும் விருட்சம் சீரழிந்து போய்விடும்.

ஒருநாள் பெய்த மழையில் கரைதொட்டு நிற்கின்றது வெள்ளம் அதனளவு உயர்ந்து சிரிக்கின்றது அல்லியும், தாமரையும் இதனையே வெள்ளத்தனைய மலர்நீட்டம் என விளக்கிக் காட்டும் மூத்த குடியின் முதல் மைந்தனான வள்ளுவர் மானிடத்தை நோக்கி மௌனமாக வினா தொடுக்கின்றார். உடன் உயரம் வளர்ந்த அளவிற்கேனும் உள்ளம் உயரவேண்டாமோ? வாசிப்பும் மொழியறிவும் அற்ற சமுதாயம் எவ்வாறு அமையும் என்பதைக் கேட்கவே அவர் அவ்வாறு முயற்சி செய்கின்றார்.

அச்சுக்கூடங்களோ அறவேயின்றி எழுதுகோலோ காகிதமோ இல்லாத காலம் தனில் எக்காலம் போற்றும் முப்பாலாம் திருக்குறளை மண்ணிற்கு வழங்க மூத்த குடியின் முதல் மைந்தனான திருவள்ளுவருக்கு எவ்வாறு முடிந்தது? வாசிப்பும் மொழியறிவும் இருந்ததால் மட்டுமே முடிந்தது. ஆனால் தற்போதைய சமுதாயத்திற்கு வாசிப்பதற்கோ நேரமும் இல்லை. விருப்பமும் இல்லை. தொலைக்காட்சிப் பெட்டிகளிலும், கைத்தொலைபேசிகளிலும் செலவிடுவதற்கே நேரம் சென்றுவிடுகிறது எனவே கூறலாம்.

அன்றாடம் நாம் நம் உடல் நலம் காக்க உடற்பயிற்சி எவ்வளவு அவசியமோ அதுபோல உளநலம் காக்க இன்றியமையாதது வாசிப்பாகும். நல்ல கருத்துக்களையும், இரசனையையும் தருகின்ற வாசிப்பானது நல்ல நண்பனைவிட மேலானது என ரஷ்ய நாட்டு இதழான பிரகா குறிப்பிடுகின்றது. எமது சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய பிரச்சினை குற்றங்கள் எனவே கூறலாம். இவற்றிற்கு அச்சாணியே வாசிப்பும் மொழியறிவும் அற்ற நிலை மட்டும் தான்.

பல முகங்களையும், பக்கங்களையும் கொண்டது வாழ்க்கை. அதனை ஆராயவும், அனுபவிக்கவும் புத்தகங்கள் எமக்கு துணை செய்து கொண்டே இருக்கின்றன. பள்ளத்தை நோக்கியே வெளளம் பாயும் அதுபோல் கள்ளத்தை நோக்கியே உள்ளம் தேயும் என்பது தேவ வாக்கு. மனதுற்றான் மனிதன் சிந்திக்கின்ற தாகமும் வேகமும் யுகமும் நிறைந்தவன். குழி முயலாக துள்ளிக் குதிக்கின்ற அவனது நினைவுகள் சீறு கொண்ட புலியாக சுழன்றடிக்கும் இவையெல்லாம் தனித்துவமானவை அல்ல. மனித மனதுடன் தொடர்புடைய மாய




மாலக் காரியமாகும். இப்படிப்பட்ட பொய்த்தோற்றமான அடக்கி ஆளும் ஆற்றல் எப்போது கிடைக்குமென்றால் வாசிப்பையும் மொழியறிவையும் வளர்த்தால் மட்டுமே கிடைக்கும்.

கனியிடையேறிய சுவையும், முற்றல் கனியிடையேறிய சாறும் நறு மலர் சூடிடும் பெண்ணும், தென்னை நல்கிய குளிரான நீரும் இனியவை என்பேன் எனினும் வாசிப்பை என்னுயிர என்பேன் என்கிறார பாரதியார். பாரதியார் பல மொழிகளைக் கற்றவர அவரினாலே வியந்து பார்க்கப்பட்ட மொழி தமிழாகும். ஏனெனில் அதன்மீது காணப்படும் வாசிப்பின் மொழியறிவும் தொன்மையும் தொடரச்சியுமே ஆகும். வாசிப்பும் மொழியறிவும் என்பது இல்லாத ஒரு வீடோ, ஊரோ, நாடோ பின்தங்கியே காணப்படும்.

மக்களின் அன்றாட நிகழ்வுகளை வெளிப்படுத்தும் காலத்தின் கண்ணாடிகளால் மொழிகள் திகழ்கின்றது. யாதும் ஊரே யாவரும் கேளீர் பிற போகும் எல்லா உயிர்க்கும் தீதும் நன்றும் பிறர்வாரா இவ்வுலகம் சுழன்று ஏர் பின்னது என்பதற்கேற்ப மக்களுக்கு வெளக்காட்டும் கலங்கரை விளக்கமாய் வாசிப்பும் மொழியறிவும் திகழ்கின்றது எனவே கூறலாம். எக்காலமும் போற்றும் நூல்களிற்கு கூட அடித்தளம் வாசிப்பாகும். வாசிப்பிருந்தால் மொழியறிவை வளர்த்து விடலாம். எனவே, மாணவரகளாகிய நாமும் எம் சமுதாயமும் வாசிப்பும் மொழியறிவும் என்பதை உணர்ந்து எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்.

# ஒழுக்கம் விழுப்பம் தரலான்

செல்வி. லக்ஷஶ்ரீகா ஜீவராஜன்
யாஃ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

ஒழுக்கம் என்பது ஒரு சமூகத்தினரால் எமக்குக் கிடைக்கப்படும் பண்பாகும். கல்வி, பணம், பதவி மூலம் நாம் அதை விலைகொடுத்து வாங்க முடியாது. நாம் ஒரு நல்ல பெயரைப் பெறுவதற்கு எமக்கு நெடுங்காலம் தேவைப்படும். ஆனால் ஒரு தீயபெயரைப் பெறுவதற்கு ஒரு நொடி போதும் என்பார்கள். அதே போல் தான் ஒழுக்கம். ஒழுக்கத்தைப் பின்பற்றி நல்ல பெயர் எடுப்பதென்பது கடினமான விடயம். ஆனால் ஒழுக்கத்தை பின்பற்றாது தீய பெயர் எடுப்பதற்கு ஒரு நிமிடம் கூடத் தேவையில்லை.

இவ்வொழுக்கத்தைப் பற்றி திருவள்ளுவர் தம்குறளில் ஒழுக்கம் உடைமை எனும் அதிகாரத்தில் அழகாக எடுத்துரைத்துள்ளார். ’ ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’. என்பது வள்ளுவர் வாக்கு. இதன் பொருள் என்ன என்றால் ஒழுக்கம்; எல்லோர்க்கும் சிறப்பினைத் தருகின்றது. என்பதனால் அவ்வொழுக்கம் உயிரிலும் போற்றிக் காக்கப்படுகின்றது ஆகும். ’பரிந்து ஓம்பிக் காக்க

ஒழுக்கம் தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை’. என்றார். வள்ளுவர். இதன் கருத்து நாம் ஒழுக்கத்தை ஒன்றாலும் அழியாமல் வருத்திக் காக்க வேண்டும். இரு பிறவிகளுக்கும் துணை செய்யக்



கூடியது என்னவென ஆராய்ந்து தெளிவுபெற்றாலும் அவ்வொழுக்கமே துணையாகும் என்பதாகும்.

’ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்’ இதன் பொருள் ஒழுக்கம் நற்குடிப்பிறப்பின் பண்பாகும். அவ்வொழுக்கத்திலிருந்து தவறினால் ஒருவனை தாழ்ந்த குடிப்பிறப்பிற்கு உரியவனெனத் தள்ளிவிடும் என்பதாகும்.

’ மறப்பினும் ஒத்துக்கொள்ளலாகும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்’ என்று கூறியுள்ளார் திருவள்ளுவர். இதன் கருத்து கற்ற வேதத்தினை மறந்து விட்டான் என்றாலும் திரும்பவும் கற்றுக் கொள்ளலாம். அந்தணன் தனது ஒழுக்கத்தில் தவறினால் அவனின் குடிப் பெருமை கெட்டுவிழும் என்பதாகும். ’அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கம் இலான் உயர்வு’. இதன் பொருள் பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாதது போல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை என்பதாகும்.

’ ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து’. இதன் கருத்து ஒழுக்கம் கெட்டுவிடுவதால் குற்றம் உண்டாகும் என்பதை அறிந்து மனவலிமை உடையோர் ஒழுக்கத்திலிருந்து தவறமாட்டார்கள் என்பதாகும். ’உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கலலார் அறிவிலாதார். இதன் பொருள் உலகத்தோடு பொருந்தி வாழும் முறையினை அறியாதவர்கள் பல நூல்களைக் கற்றவராயினும் அறிவில்லாதவர் ஆவர் என்பதாகும். ’ நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்’. இதன் கருத்து நல்ல ஒழுக்கமானது எல்லா நன்மைகளுக்கும் காரணமாகும். தீய ஒழுக்கமானது என்றும் துன்பத்தையே கொடுக்கும்.

எனவே கல்வி, பணம், பதவி என்பவற்றின் மூலம் நாம் நல்ல பெயரைப் பெற முடியாது. நல்ல நடத்தைகள் மூலம் உருவாகும் ஒழுக்கத்தின் மூலம் தான் நாம் நல்ல பெயரைப் பெற முடியும். ஆகவே இவ்வொழுக்கத்தைப் பின்பற்றி நாமும் சிறப்படைவோமாக.

காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# மூத்த மற்றும் கனிஷ்ட கலைஞர்கள் கலந்த களிகம்புப் பயிற்சி பட்டறை!

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் சாய்ந்தமருது பிரதேச செயலகம் நடத்திய களிகம்பு பயிற்சி பட்டறையும், அரங்கேற்றமும் நேற்று சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ் ஒருங்கமைப்பில் இடம்பெற்றது.

இந்த களிகம்பு பயிற்சி பட்டறை மற்றும் அரங்கேற்ற நிகழ்வில் சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்ட குழு, சாய்ந்தமருது முஹம்மதிய்யா கலைமன்றம், மாவடிப்பள்ளி வளர்பிறை கலை மன்றம் ஆகியவற்றின் மூத்த மற்றும் இளம் கலைஞர்கள் பங்குகொண்டு கோலாட்டத்தில் ஈடுபட்டதுடன் சிலம்பாட்டமும் செய்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா கலந்துகொண்டார். மேலும் சாய்ந்தமருது கலாசார உத்தியோகத்தர் ஏ.எச். சபீகா, சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.கே. ரிம்ஸான், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நௌசாத், கலை விரிவுரையாளரும், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்திக்குழு நிறைவேற்று சபை உறுப்பினருமான ஏ.ஐ. அமீர், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்திக்குழு செயலாளர் அஸ்வான் எஸ். மௌலானா, அபிவிருத்திக்குழு பிரதி செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர் உட்பட சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய உறுப்பினர்கள், கலைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)



## கடவுச்சீட்டுக்காக கைவிரல் இடும் வசதியை கல்முனையில் ஏற்படுத்துக

### யஹியாகான் ஜனாதிபதிக்கு கடிதம்.

கடவுச்சீட்டுக்காக விண்ணப்பித்து - கைவிரல் அடையாளம் இடும் வசதியை கல்முனை பிரதேச செயலகத்திலும் ஏற்படுத்தித் தருமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதில் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன. இது உண்மையில் பாராட்டுதலுக்குரிய விடயம்.

நாடு , இன்று எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியில் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கக் கொழும்பு மற்றும் வவுனியா செல்வது என்பது பெரும் செலவுமிக்கதாகும். அதனை இன்று முதல் ஒன்லைன் வசதி மூலம் இலகுவாக்கியிருப்பது பல்லாயிரம் விண்ணப்பதாரர்களுக்கு இனிப்பான செய்திதான்.

அதேவேளை - கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக கைவிரல் அடையாளங்களை பதிவு செய்வதற்காக - கிழக்கின் முக வெற்றிலை என அறியப்படும் கல்முனை மாநகரம் தவிர்க்கப்பட்டிருப்பது இங்குள்ள மக்களுக்குப் பெரும் துயர் நிறைந்த செய்தியாகவே பார்க்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும் - கல்முனை தொகுதி மக்களைப் பொறுத்தவரை - சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பகுதிகள் தூரம் கொண்டவை.

எனவே - கைவிரல் அடையாளம் இடும் வசதியை , கல்முனை பிரதேச செயலகத்திலும் ஏற்படுத்தித் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன் என ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக்கடிதத்தின் பிரதி குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு பொறுப்பான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்க்கும் யஹியாகான் அனுப்பி வைத்துள்ளார். (05)

## கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை நிர்ப்பீடன முன்னாய்வு மீளாய்வுக் கூட்டம்






கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பஸாலால் நிர்ப்பீடனம் தொடர்பான முன்னாய்வு மீளாய்வு கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த மீளாய்வில் கல்முனை சுகாதார பிராந்தியத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களும் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்களும் பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன் சுகாதார வைத்திய அதிகாரிகள் நிர்ப்பீடனம் தொடர்பில் தத்தமது பிரதேச முன்னேற்ற அறிக்கைகளை முன்வைத்து விளக்கக்காட்சி தொகுப்புரைகளையும் வழங்கினர். இந்நிகழ்வின் போது தொற்று நோய்களை திறம்பட எதிர்த்துப்போராடவும் குழந்தைகள் மற்றும் தாய்மாரின் நிர்ப்பீடன சக்தியை அதிகரிப்பதற்குமான ஆலோசனையிலும் பங்குபற்றுனர்கள் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் போது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 05 மடிக்கணினிகள் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜிதால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## பேரிடர் முகாமைத்துவ செயலமர்வு சாய்ந்தமருதில்

சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அனர்த்த இடர் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வொன்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. எம். றியாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஐ.எல்.ஸாஹிர் வளவாளராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், உதவிப்பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா, திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் உட்பட கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களைச்சேர்ந்த திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்கள், கிராம நிர்வாக உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கரையோரம் பேணல் உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பள்ளிவாயல்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களில் அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மனித செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பாகவும் அனர்த்த நிலைமைகளின் போது மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு விரிவாகக் கலந்துரை யாடப்பட்டது.

(05)

## கடனைத் திரும்பப்பெறச் சென்ற தமையன் மீது மட்டக்களப்பில் தாக்குல்; 4 பேர் கைது

மட்டக்களப்பு தலை நகர் பகுதியில் தனது சகோதரனுக்கு 17 வருடத்துக்கு முன்னர் கடனாக கொடுத்த பணத்தை திரும்பெற வீட்டுக்குச் சென்ற போது தமையனை சகோதரர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் சகோதரன், சகோதரி, சகோதரியின் கணவர் மற்றும் மகள் ஆகிய 4 பேரை கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மட்டு கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர், தனது காணியை கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் விற்று அந்தப் பணத்தில் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மூத்த சகோதரனுக்கு கடனாக வழங்கிய நிலையில் மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்று கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் திரும்பி வந்துள்ளார்.

இந்நிலையில், கடனைத் திருப்பிக் கேட்டதில் வாய்த்தர்க்கம் முற்றியதில் அவர் மீது அவரது சகோதரன், சகோதரி, சகோதரியின் கணவர் மற்றும் மகள் சேர்ந்து தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் தாக்குதலை மேற்கொண்ட இரு பெண்கள் இரு ஆண்கள் உட்பட 4 பேரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)







மத்தியஸ்த நுட்ப முறை மற்றும் உபாயங்கள் தொடர்பான 5 ஆம் நாள் பயிற்சிநெறி காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிநெறியின் போது அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலுநர் எம்.ஐ.எம் ஆஸாத் மற்றும் வவுனியா மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலுநர் எஸ். விமலராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். இந்தப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனால் பயிற்சி வழங்கிய பயிற்றுவிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாய – வர்த்தக முயற்சியாண்மை பங்கேற்பு செயற்திட்டத்துக்கு உதவிகள் வழங்கத் தயார்

## விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் உத்தரவாதம்

விவசாய அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்படும் சிறியளவிலான விவசாய - வர்த்தக முயற்சியாண்மை பங்கேற்பு செயற்திட்டத்தின் ஊடாக அடுத்துவரும் பெரும்போக விளைச்சல் காலப்பகுதியில் 16 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படுமென விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது.

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர்ரெினாதபஸ்ஸம்மற்றும்விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. இச்சந்திப்பின்போது சிறியளவிலான விவசாய - வர்த்தக முயற்சியாண்மை பங்கேற்பு செயற்திட்டம் உள்ளடங்கலாக விவசாயத்துறையின் மீட்சியை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றசெயற்திட்டங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அதன்படி விவசாய - வர்த்தக முயற்சியாண்மை பங்கேற்பு செயற்திட்டத்தின்கீழ் சோளப்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் அடுத்துவரும் பெரும்போக விளைச்சல் காலப்பகுதியை இலக்குவைத்து அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொணராகலை, பொலனறுவை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 16,000 ஹெக்டேயர் நிலப்பரப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நிலப்பரப்பில்சோளப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு அவசியமான தரமான விதைகள், இரசாயன உரம், நிலத்தைப் பதப்படுத்தும்வசதிகள்மற்றும்நிதியுதவிகள் என்பன விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்துக்கு அவசியமான உதவிகள் தொடர்பான முன்மொழிவுகள் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை வழங்கத் தயாராக இருப்பதாக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் அதிகாரி ஷெரினா தபஸ்ஸம் உறுதியளித்துள்ளார். (05)

## படகு மூலம் ஆஸிக்கு ஆட்கடத்தல்: இராணுவ கடற்படை சிப்பாய் கைது!

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆள்களை ஆஸ்திரேலியாவுக்குஅனுப்பியகுற்றச்சாட்டில் இராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவரும் கடற்படை சிப்பாய் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றவியல் புலனாய்வு பிரிவினரால் வாக்குமூலமொன்றை பெற்றுக்கொள்வதற்காக குறித்த பிரிவுக்கு அழைக்கப்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில், சம்பூர் பிரதேசத்தில் வசிக்கும் குழுவினரே இந்த மனித கடத்தலை மேற்கொண்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது. (05)

## ஏழு பெரல்களில் ஆயிரத்து 300 லீற்றர் எத்தனோல் கடத்தல் ; ஒருவர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி எத்தனோல் கடத்திய குற்றச்சாட்டில் எகொடஉயனபொலிஸாரால்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழு பெரல்களில் 1,300 லீற்றருக்கும் அதிகமான எத்தனோலை எகொட உயன பிரதேசத்தில் லொறி ஒன்றில்ஏற்றிச்செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோதே கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

## வெடிமருந்துகளுடன் ஒருவர் ஹொரணையில் கைதானார்!

அனுமதிப்பத்திரம் இன்றி வெடிமருந்துகளை எடுத்துச்சென்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என பாணந்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹொரணை பொருவடந்த மகுருவெல வீதியில் வைத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் வெடிமருந்துகள் மற்றும் 5 டெட்டனேட்டர்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் பண்டாரகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (05)

## யானையை ஏற்றிச் செல்ல தாய்லாந்து விமானம் வருகிறது

முத்துராஜா என்ற யானையை (சக்சுக்ரின்) ஏற்றிச் செல்வதற்காக தாய்லாந்து ஏர்லைன்ஸின் சிறப்பு சரக்கு விமானம் இம்மாதம் 24 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த யானை கட்டுநாயக்காவிலிருந்து சியன்மாய் விமான நிலையத்துக்கு கொண்டுசெல்லப்படவுள்ளது.

இதற்கான விமானப் பயண நேரம் 6 மணி நேரமாகும். இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இந்த முத்துராஜாவுக்கு சிகிச்சைய ளிக்க இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் யானையை மீண்டும் அழைத்துச் செல்லப்படவுள்ளது. (05)

## அம்பாறை பொலிஸ் அத்தியட்சகருக்கு ஆலோசனைக் குழுவினால் கௌரவிப்பு

கல்முனைத் தலைமையகப் பொலிஸ் நிலைய அரையாண்டுப் பரிசோதனை நிகழ்வு நேற்று இடம்பெற்ற நிலையில் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க பொலிஸ் ஆலோசனைக் குழுவினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இன்னும் சில தினங்களில் இலங்கைப் பொலிஸ்சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரை பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களால் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வானது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இடம்பெற்றது. கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க போர்க் காலங்களில் விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் சேவைகளில் பல்வேறு பதவிகளில் சேவையாற்றி அப்பகுதி மக்களுடன் நல்லுறவுகளை கட்டியெழுப்பியவர்.

# கணினிப் பயிற்சி நெறி





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் கணினி அறிவினை மேம்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார தகவல் முகாமை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.முஜீபால் கணினிப் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (05)

# கல்முனை மாநகர சபையில் புதனன்று கோலாகலமாக இடம்பெற்ற விருது விழா








(ஏ.எம்.அஸ்லம்)

கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான விருது விழா புதன்கிழமை மாலை, இருதயநாதர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இதன்போது மாநகர சபையின் 14 துறைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அதிசிறந்த ஊழியர்கள் 14 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ மேற்பார்வையாளரான எம்.எம். றிஸ்வான், கல்முனை மாநகர சபையின் கடந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு,விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் நிர்வாக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி, ஓய்வு பெற்றுள்ள எம்.ஏ.றஹீம், ஆனந்தகௌரி கந்தசாமி உள்ளிட்ட 6 உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 8 உத்தியோகத்தர்களினதும் சேவைகளைப் பாராட்டி, நினைவுச் சின்னங்கள் வழங்கிகௌரவிக்கப்பட்டன.

மேலும், மாநகர சபையின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற திண்மக் கழிவகற்றல் சேவையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்ற 5 மேற்பார்வையாளர்கள்உள்ளிட்ட 98 ஊழியர்கள் இதன்போது பரிசுப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கல்முனை மாநகர சபையை பொறுபேற்று குறுகிய காலத்தினுள் நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, மாநகர சபையை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற் றியமைத்தமைக்காக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மிக்கு, 'ஆளுமைக்கான அடையாளம்' என்று மகுடம் சூட்டப்பட்டது. அவர் ஊழியர் சமூகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவில் மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களினால் அரங்கேற்றப்பட்ட பாடல்கள், நடனங்கள், கவிதைகள் உள்ளிட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகள் விழாவை களைகட்டச்செய்திருந்தன.

தேசிய கீதத்துடன் தொடங்கிய இந்த விருது விழாவில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் வரவேற்புரையையும் பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ. வட்டப்பொல ஆகியோர் வாழ்த்துரைகளையும் விழாக்குழுச்செயலாளரான வருமான பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் நன்றியுரையையும் நிகழ்த்தினர். விழா நிகழ்வுகளை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ஜாபிர் தொகுத்து வழங்கினார்.

இவ்விழாவில் மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், ஆயுர்வேத வைத்திய அதிகாரி நந்தினி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிதி உதவியாளர் சசிகலா, உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாட் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமானப் பரிசோதகர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அனைத்துப் பிரிவுகளினதும் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## திருகோணமலை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டம் பற்றி நேற்று ஆராய்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் விசேட திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. திருகோணமலை மாவட்டச் செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருபிரதேசசெயலகத்திலும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிடம் குறித்துக் கூட்டத்தில் ஆராயப்பட்டது..

சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள குறித்த கலந்துரையாடலில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் த.பிரணவன், பிரதேசசெயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2023இல் வெளியிடப்பெற்றது.